# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

**1964ம் ஆண்டுக்கான**

**அறிக்கை**

# பகுதி 1

பிரசுரம்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

சென்ற் கூம்ஸ், தலவாக்கொல்லை, இலங்கை

**1966**

# பொருளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| சபை | 3 |
| உத்தியோகத்தர் | 4 |
| 1964 ம் ஆண்டுக்கான நிலையக் கட்டுப்பாட்டுச் சபையின் 39 வது வருடாந்த அறிக்கை | 9 |
| தே. ஆ. நி. சபைத் தலைவரின் அறிக்கை | 17 |
| கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபரின் அறிக்கை | 20 |
| போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனியின் அறிக்கை | 24 |
| பரிசோதிக்கப்பட்ட கணக்குகளின் விபரக்கூற்று | 37 |
| ஐந்தொகைக் கணக்கு | 37 |
| தொழிற்படு கணக்கு — சென்ற் கூம்ஸ் தோட்டம் | 38 |
| தொழிற்படு கணக்கு — சென்ற் ஜோக்கிம் தோட்டம் | 38 |
| 1964 ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு | 39 |
| நிலையான மூலதனங்களின் சுருக்கம் | 40 |

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

**1964 டிசெம்பர் 31ந் திகதியன்றுள்ள கட்டுப்பாட்டுச் சபை**

தலைவர் : திரு. எப். அமரசூரியா.

பதவிவழி அங்கத்தவர்கள்—

கமத்தொழில் அதிபர் : திரு. ஏ. தி. எம். சில்வா.

கௌரவ நிதி அமைச்சரின் பிரதிநிதி : திரு. ஜி. டி. லோஸ்.

தலைவர், இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கம் : திரு. டபிள்யு. ஜே. சில்டஸ்டன்.

தலைவர், இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம் : திரு. ஜே. எல். கப்பர்.

தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம் : திரு. பி. நடேசன், சி.எம்.ஜி; ஓ.பி.இ.

தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரி : திரு. சி. பி. சண்முகம்.

அதிபர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் : கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம், ஓ.பி.இ.

நியமன அங்கத்தவர்கள் :

இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு. எஸ். பி. வைத்திலிங்கம்
திரு. டபிள்யு. தி. உவில்லியம்ஸ்
திரு. ஜி. பி. மிடில்டன்

இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு. சி. ஆர். வரன்
திரு. எச். ஏ. உவிற்ருல்
திரு. டி. ஏ. நீல்

கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு. எப். அமரசூரியா
திரு. எஸ். பத்மநாதன்
திரு. ஜே. எல். டி. பீரிஸ்

சிறு தோட்டச் சொந்தக்காரரின் பிரதிநிதிகள் :

திரு. டி. இ. ஹெற்றியாராச்சி, ஜே.பி., யு.எம்., திரு. எம். இராஜேந்திரம், எம்.பி.இ., ஜே.பி.

பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதி : வெற்றிடம்.

செயலாளர் : திரு. ஜி. எம். ஸ்பாக்ஸ்.

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## 1964 டிசெம்பர் 31 ம் திகதியன்றுள்ள உத்தியோகத்தர்

அதிபர் : ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம், ஓ.பி.இ., பீ.எஸ்சி., பீ.எச்டி (லண்), எப்.ஆர்.ஐ.சி., கமத்தொழிற் தகுதித் தேர்வுப்பத்திரம் (கன்டாப்)

பிரதி அதிபர் : ஜே. ஏ. எச். தொல்ஹஸ்ட், பீ.எஸ்சி (றெடிங்)

கமத்தொழில் இரசாயனவியல்—

கமத்தொழில் இரசாயனவறிஞன் : ஜே. ஏ. எச். தொல்ஹஸ்ட், பீ.எஸ்சி (றெடிங்)

ஆராய்ச்சி உதவியாளர்கள் : எஸ். சிவசுப்பிரமணியம், பீ.எஸ்சி (இலங்)
டபிள்யு. பண்டாரநாயக்கா, பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : வி. மெண்டிஸ், தி. சி. சற். ஜேமன், இ. ஓ. ஸ்டுவற், (திருமதி) பி. ஐ. டி சில்வா, பீ.எஸ்சி (இலங்), எஸ். சுந்தரலிங்கம், பீ.எஸ்சி (பூனு), கே. கோவிந்தசாமி, தி. குலரத்னு, பீ.எஸ்சி (இலங்)

தாவர இனப்பெருக்கவியல்—

ஆலோசகர் : ஏ. வி. இரிச்சேட், பீ.எஸ்சி (லண்), எம்.எஸ்சி (கலிபோனியா), கமத்தொழிற் தகுதித் தேர்வுப் பத்திரம் (கன்டாப்), ஏ.ஐ.சி.தி.ஏ (திருனிடாட்)

ஆராய்ச்சி உதவியாளர் : *எஸ். குலசேகரம், பீ.எஸ்சி (இலங்)

ஆராய்ச்சி உதவியாளர் (தாவர விருத்தி) : ஏ. ஆர். செபஸ்டியாம்பிள்ளை, பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : எச். ஆர். சொலமன்

சென்ற் கூம்ஸ் : ஏ. ஜே. டி. குரூஸ்
டி. டி. குரூன்

ஹந்தானை : எச். பி. இரத்நாயக்கா

பயிராக்கவியல்—

பிரதான பயிராக்கவியலறிஞன் : எச். என். அசலொ, கலாநிதி (வஹிநன்ஜின்)

ஆராய்ச்சி உதவியாளர்கள் : *டபிள்யு. எம். டபிள்யு. பி. மணிப்புரு, பீ.எஸ்சி (இலங்), எஸ். சந்தனம், பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : எஸ். எம். கந்தசாமி, எம். சிக்குராஜபதி, பீ.எஸ்சி (இலங்)

---

* வெளிநாட்டில் பயிற்சிபெறுகிறுர்

## கீழ்ப் பிரதேச சேவை—

கீழ்ப்பிரதேச விஞ்ஞான உத்தியோகத்தர் : எல். எச். பெர்னுண்டோ, பீ.எஸ்சி, பீ.எச்டி (லண்)

மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் : ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ (தொறன்தொ)

ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பயிராக்கவியல்) : எஸ். சி. வன்னிகரத்ன, பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (வேல்ஸ்)

நுண்தொழில் உதவியாளர்கள் : ஜே. ஐ. எச். பண்டாரநாயக்கா

சென்ற் ஜோக்கிம் : எச். டி. ஜயசிங்கா, எச். எச். சமரக்கோன், என். யோகரத்தினம், பீ.எஸ்சி (அலகபாட்), யு. பி. டி. எஸ். வைத்தியநாதா, பீ.எஸ்சி (இலங்)

கொட்டாவ : கே. எச். ஜி. குணபால

பிரதான எழுதுவினைஞர் : ஆர். ஐ. பெரைரா

சுருக்குத் தட்டெழுத்தாளர் : எஸ். கே. பி. தம்பிமுத்து

எழுதுவினைஞர் : கே. பி. குணவர்தன

## தாவர உடற்றெழிலியல்—

தாவர உடற்றெழிலறிஞன் : யு. பெத்தியாகொட, பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (லண்), டி.ஐ.சி

ஆராய்ச்சி உதவியாளர் : எஸ். கந்தையா, பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : எம். பியசேன, எஸ். நாகராஜா, பீ.எஸ்சி (இலங்), என். எஸ். இராஜேந்திரம், பீ.எஸ்சி (மதராஸ்), ஜி. எம். எச். பி. விஜயதுங்கா, எஸ். கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி (இலங்)

## இழைப்புழுவியல்—

ஆலோசகர் : ஏ. கேர், பீ.எஸ்சி (எடின்), பீ.எச்டி (அடிலேய்ட்)

பதில் இழைப்புழுவியலறிஞன் : என். சண்முகநாதன், பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (லண்)

ஆராய்ச்சி உதவியாளர் : *பி. சிவபாலன், பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : எம். கே. வைத்திலிங்கம், பி. ஏ. ஜோன், எஸ். சமறஜீவா, ஏ. ஆர். எம். ஹசிம்.

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுகிறுர்

## தாவர நோயியல்

ஆலோசகர் : ஏ. கேர். பீ.எஸ்சி (ஏடின்), பீ.எச்டி (அடிலெய்ட்)
தாவர நோயியலறிஞன் : என். சண்முகநாதன், பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (லண்)

ஆராய்ச்சி உத்தியோகத்தர் : ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (லண்), டி.ஐ.சி

நுண்தொழில் உதவியாளர்கள் : டபிள்யு. டபிள்யு. றெட்லிக், பீ.எஸ்சி (இலங்), பி. வி. அருள்பிரகாசம், பீ.எஸ்சி (மதராஸ்), எஸ். முருகையா, டபிள்யு. ஆர். எப். றொட்றிகொ, பீ.எஸ்சி (இலங்)

## சிற்றுயிரியல்

சிற்றுயிலறிஞன் : ஜே. இ. கிரனம், பீ.ஏ (கன்டாப்), டி.ஐ.சி

ஆராய்ச்சி உத்தியோகத்தர் : டி. கல்நைடோ, பீ.எஸ்சி (இலங்), பீ.எச்டி (லண்)

ஆராய்ச்சி உதவியாளர்கள் : டி. ஜே. டபிள்யு. றணவீர, *டபிள்யு. தந்தநாராயன, பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : இ. எப். டபிள்யு. பெர்ணண்டோ, பீ.எஸ்சி (இலங்)

சென்ற் கூம்ஸ் : சி. சண்முகம், ஏ. கதிரவேற்பிள்ளை, பீ.எஸ்சி (இலங்)

ஹந்தானே : கே. திருஞானசுந்தரம், பீ.எஸ்சி (இலங்)

## உயிரினவிரசாயனம்

உயிரினவிரசாயனவறிஞன் : ஜி. டபிள்யு. சன்டர்சன், பீ.எஸ்சி (கலிபோனியா), பீ.எச்டி (நொட்)

உயிரினவிரசாயனவறிஞன் (உற்பத்தி): ஆர். எல். விக்கிரமசிங்கா, பீ.எஸ்சி (இலங்), பீ.எஸ்சி (லண்), பீ.எச்டி (செவ்), எப்.ஆர்.ஐ.சி

ஆராய்ச்சி உதவியாளர்கள் : *ஆர். ஆர். செல்வேந்திரன், பீ.எஸ்சி (இலங்) ஜி. ஆர். ரூபட்ஸ், பீ.எஸ்சி (இலங்)

நுண்தொழில் உதவியாளர்கள் : பி. பி. எம். பெரேரா, கே. சிவபாலன், பீ.எஸ்சி (இலங்), வி. பெர்ணண்டொ. கே. பி. டபிள்யு. சி. பெரேரா, பீ.எஸ்சி (இலங்), எம். தி. சுப்ரமணியம், பீ.எஸ்சி (இலங்)

## தொழின்முறையியல்

பதில் தொழின்முறையியலறிஞன் : டி. கீர்த்திசிங்கா, பீ.எஸ்சி (இலங்), பி.எச்டி (லண்), டி.ஐ.சி

ஆராய்ச்சி உதவியாளர் : வெற்றிடம்.

நுண்தொழில் உதவியாளர்கள் : எல். எஸ். வீரகொட, டபிள்யு. சி. ஏ. டி. சில்வா, பீ.எஸ்சி (இலங்), சி. கந்தப்பா, பீ.எஸ்சி (இலங்), எஸ். சமரசிங்கம்

## புள்ளிவிவரயியல்

புள்ளிவிவரவியலறிஞன் : பி. கணபதிப்பிள்ளை, பீ.எஸ்சி (லண்), எப்.எஸ்.எஸ்
உதவியாளர் : கே. சீவரத்தினம்

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுகிறுர்

## ஆலோசனைச் சேவை

பிரதான ஆலோசனை உத்தியோகத்தர்: சி. பி. பொஸ்டர்–பாறம், எம்.ஏ (கன்டாப்)
ஆராய்ச்சி உதவியாளர்கள் : *டி. தி. வெத்தசிங்கா, பீ.எஸ்சி (இலங்), ஆர். கே. நத்தானியல், பீ.எஸ்சி (பூனு)
மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர்கள்:
ஊவா : எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி (இலங்), எம்.இடி (கலிபோனியா)
கீழ்ப்பிரதேசம் : ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ (தொறன்தொ)
நுண்தொழில் உதவியாளர் : டி. என். ஆர். விஜயவர்தன
நிழற் படமெடுப்பவர் : டி. ஜே. எம். ஹெற்றியாராச்சி
கோவைதொகுக்கும் எழுதுவினைஞர் : கே. எல். டி. அல்விஸ்

## சென்ற் கூம்ஸ் தோட்டம்

அத்தியட்சர் : ஜே. ஜி. ஜி. தென்னக்கோன்
கந்தோர்ப் பதவியினர் : பீ. ஈ. டிசில்வா, எச். சி. விக்கிரமசிங்கா, எம். ஆர். கே. கப்பிரியல்
அப்போதிக்கரி : எஸ். பி. டிசில்வா

## சென்ற் ஜோக்கிம் தோட்டம்

அத்தியட்சர் : ஜி. எஸ். முத்தெத்துவெகம
கந்தோர்ப் பதவியினர் : ஜி. எல். ஏ. தோமஸ்

## எந்திரவியல்

எந்திரவியல்பகுதி மேற்பார்வையாளர் : ஓ. ஜே. பெர்னண்டோ
மின்சார முகாரி : டபிள்யு. ஆர். சொலமன்
வேலைத்தல எழுதுவினைஞர் : ஆர். ஏ. டானியல்
பண்டசாலைப் பொறுப்பாளர் : ஐ. பி. திசநாயக்க
இயந்திரத் தொழிலாளர்கள் : டி. ஏ. எஸ். ஓபாதா, கே. எஸ். வடிவேலு

## பரிபாலனம்

பிரதான பரிபாலன உத்தியோகத்தர் : ஜி. எம். ஸ்பாக்ஸ் பீ.ஏ (இலங்)
அதிபரின் அணுக்க உதவியாளர் : ஏ. சி. பெரேரா
உதவி பரிபாலன உத்தியோகத்தர்: பி. பத்மநாதன், பீ.எஸ்சி (இலங்), ஏ.சி.ஏ
கணக்கு உதவியாளர்: ஏ. எச். பி. டயஸ்
உதவிச் செயலாளர் : சி. கீர்திரத்ன, எப்.சி.சி.எஸ்
சுருக்குத் தட்டெழுத்தாளர்கள் : எப். ஜி. டிசில்வி
ஜி. ஏ. எஸ். குணசிங்க
பி. டபிள்யு. உடுவாவல
எஸ். ஏ. எல். எச். பெர்னண்டோ
எஸ். டி. ஜே. ஜே. வித்தானபத்திரன
என். பீரிஸ்

---

*வெளிநாட்டில் பயிற்சி பெறுகிறார்

கணக்கு எழுதுவினைஞர்கள் : டபிள்யு. ஜே. சாமுவல்
எம். பி. பாலிஸ்
எம். எச். டபிள்யு. ஆரியரத்ன
தி. ஆர். பி. சளி
கே. டி. பி. எச். அபயகுணவர்தன
ஜி. ஏ. கே. பி. டிசில்வா
எஸ். குலசபாநாதன்
எச். அத்தநாயக்க
என். சச்சிதானந்தன்

பதிவு எழுதுவினைஞர் : ஜே. பி. ஜே. இ. நவரத்ன

எழுதுவினைஞர்/தட்டச்சாளர்கள் : வி. கோதாகொட
ஜே. என். அப்பசிங்கா
டி. டபிள்யு. பதலோமியஸ்
எஸ். பி. வெத்தாவ

நூல்நிலையப் பொறுப்பாளர்: டி. ஜே. எஸ். டிசில்வா, பீ.எஸ்சி (பஞ்ஜாப்)

நூல்நிலைய உதவியாளர் : டி. எஸ். ஜயசேகர

மொழிபெயர்ப்பாளர்/போதனாசிரியர் : சி. எம். பெர்னாண்டோ, பீ.ஏ (இலங்)

<u>அதிதி முகவர்கள்</u>

சென்ற் கூம்ஸ் பி. ஆர். யு. ஈஸ்டில்

சென்ற் ஜோக்கிம் ஜே. டபிள்யு. கிரேய்க்

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

**1964 ம் ஆண்டுக்கான கட்டுப்பாட்டுச்சபையின் முப்பத்தியொன்பதாவது வருடாந்த அறிக்கை**

**நிறுவனம்**

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், 1925 அக்டோபர் 27ம் திகதியிடப்பட்ட 1925ம் ஆண்டின் 12ம் இல. கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

**அரசமைப்பு**

கட்டுப்பாட்டுச் சபையின் அரசமைப்பு இலங்கை சட்ட நிரூபணங்கள் (1956 திருத்தம்) தலைப்பு 438லும் பின்வரும் தேயிலை ஆராய்ச்சி (திருத்தச்) சட்டங்களிலும் வரையறுக்கப்பட்டுள்ளன :

1957, மார்ச், 18 எனத் திகதியிடப்பட்ட 1957ம் ஆண்டின் 8ம் இல.
1959, ஜனவரி, 21 எனத் திகதியிடப்பட்ட 1959ம் ஆண்டின் 2ம் இல.
1959, ஜனவரி, 21 எனத் திகதியிடப்பட்ட 1959ம் ஆண்டின் 3ம் இல.
1961, ஜூன், 19 எனத் திகதியிடப்பட்ட 1961ம் ஆண்டின் 57ம் இல.

திருத்தச் சட்டப் பகுதிகளின் பக்கங்கள் இலங்கை சட்ட நிரூபணங்களின் 1956ம் ஆண்டின் திருத்தங்களுடன் ஒவ்வாமையின்றி யாவற்றையும் ஒன்று சேர்ப்பது அவசியமாகும்.

# சபையினதும் செயற்குழுக்களினதும் அங்கத்தவர்

**சபை**

**தலைவர் :** திரு எப். அமரசூரியா

**பதவிவழி அங்கத்தவர் :**

**கமத்தொழில் அதிபர்**

திரு ஏ. தி. எம். சில்வா

**கௌரவ நிதி அமைச்சரின் பிரதிநிதி :**

திரு ஜி. டி. லோஸ்

**தலைவர், இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கம்:**

திரு வி. ஜி. டபிள்யு. ரத்னயக்க, எம்.பி.இ.

தலைவர், இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம்:

திரு ஜே. எல். கப்பர்

தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம்:

திரு பி. நடேசன், சி.எம்.ஜி; ஒ.பி.இ

தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரி:

திரு சி. பி. சண்முகம்

அதிபர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்:

கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம், ஒ.பி.இ

நியமன அங்கத்தவர்கள்:

இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கப் பிரதிநிதிகள்:

திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு டபிள்யு. தி. உவில்லியம்ஸ்
திரு ஜி. பி. மிடில்டன்

இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவப் பிரதிநிதிகள்:

திரு சி. ஆர். வரன்
திரு எல். எப். ஜே. சிமித்
திரு ஆர். ஏ. ஜி. மக்மிகன்

இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள்:

திரு எப். அமரசூரியா
திரு எஸ். பத்மநாதன்
திரு ஜே. எல். டி. பீரிஸ்

சிறுகாணிகள் சொந்தக்காரர்களின் பிரதிநிதிகள்:

திரு. டி. இ. ஹெற்றியாராச்சி, ஜே.பி., யு.எம்
திரு சி. எஸ். இரத்வத்த

சனப்பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதிகள்:

திரு ஜே. டி. வீரசேகர, பா. உ.

செயலாளர்: திரு ஜி. எம். ஸ்பாக்ஸ்

இவ்வருடத்தில் சபை அங்கத்தவரில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன:

பதவிவழி அங்கத்தவர்கள்:

தலைவர், இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கம்

ஏப்ரல், 4ந் திகதியிலிருந்து திரு வி. ஜி. டபிள்யு. ரத்ஞயக்காவிற்குப் பதில் திரு டபிள்யு. ஜே. சில்டன்.

தலைவர், இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம்:

மே, 1ம் திகதியிலிருந்து திரு ஜே. எல். கப்பருக்குப் பதில் திரு ஆர். சி. பொயிஸ்.

அக்டோபர், 16ம் திகதியிலிருந்து திரு ஆர். சி. பொயிசுக்குப் பதில் திரு ஜே. எல். கப்பர்.

## நியமன அங்கத்தவர்கள்

இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவ பிரதிநிதிகள் :

மார்ச் 17ம் திகதியிலிருந்து திரு எல். எப். ஜே. சிமித்திற்குப் பதில் திரு எஸ். ஏ. உவிற்ருல்.

நவம்பர் 13ம் திகதியிலிருந்து திரு ஆர். ஏ. ஜி. மக்மிகனிக்குப் பதில் திரு டி. ஏ. நீல்.

சிறுகாணி சொந்தக்காரர்களின் பிரதிநிதிகள்

ஜுலை 23ம் திகதியிலிருந்து திரு சி. எஸ். இரத்வத்தவுக்குப் பதில் திரு எம். இராஜேந்திரம்

கூட்டங்கள்

ஏழு சபைக் கூட்டங்கள், ஜனவரி 22, மார்ச் 6, மார்ச் 17, மே 8, ஜுன் 26, செப்றெம்பர் 4, டிசெம்பர் 17 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

## நிர்வாகச் செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று நிர்வாகச் செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு:

திரு எப். அமரசூரியா (தலைவர்)
திரு ஜே. எல். கப்பர்
திரு சி. பி. சண்முகம்
திரு ஜி. டி. லோஸ்
திரு ஆர். ஏ. ஜி. மக்மிகன்
திரு எல். எப். ஜே. சிமித்
திரு வி. ஜி. டபிள்யு. ரத்னுயக்க
கலாநிதி ஏ. டபிள்யு, ஆர். ஜோக்கிம்
திரு ஜி. எம். ஸ்பாக்ஸ் (செயலாளர்)

இவ்வருடத்தில் அங்கத்தவர்களில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன:

ஏப்ரல் 3ம் திகதியிலிருந்து வி. ஜீ. டபிள்யு. ரத்னுயக்கவிற்குப் பதில் திரு டபிள்யு. ஜே. சில்டஸ்டன். மே 1ம் திகதியிலிருந்து திரு ஜே. எல். கப்பருக்குப் பதில் திரு ஆர். சி. பொயிஸ்.

அக்டோபர் 16ம் திகதியிலிருந்து திரு ஆர். சி. பொயிசுக்குப் பதில் திரு ஜே. எல். கப்பர். டிசெம்பர், 17ம் திகதியிலிருந்து திரு ஆர். ஏ. ஜி. மக்மிகனிற்குப் பதில் திரு டி. ஏ. நீல். மே, 8ம் திகதியிலிருந்து திரு எல். எப். ஜே. சிமித்திற்குப் பதில் திரு எஸ். பத்மநாதன்.

கூட்டங்கள்

இவ்வருடத்தில் ஏழு செயற்குழுக் கூட்டங்கள், ஜனவரி 16, பெப்பிரவரி 13, மே 8, ஆகஸ்ட் 14, செப்றெம்பர் 22, அக்டோபர் 19, நவம்பர் 11 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

## பரிசோதனை தோட்டச் செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று பரிசோதனை தோட்டச் செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு :

கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம் (தலைவர்)
திரு. எப். அமரசூரிய (தலைவர், தே. ஆ. நி. சபை).
திரு வி. ஜி. டபிள்யு. ரத்னுயக்க (தலைவர், இலங்கை தோட்டதுரைமார்கள் சங்கம்).
திரு ஜே. எல். கப்பர் (தலைவர், இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம்).
திரு பி. ஆர். யு. ஈஸ்டீல் (அதிதி முகவர், சென்ற் கூம்ஸ் தோட்டம்)
திரு ஜே. டபிள்யு. கிரேய்க் (அதிதிமுகவர், சென்ற் ஜோக்கிம் தோட்டம்)
திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு டபிள்யு. தி. உவில்லியம்ஸ்
திரு எச். ஏ. உவிற்றுல்
(விஞ்ஞான செயற்குழுப் பிரதிநிதிகள்)
திரு ஆர். எல். ஹாவி (பதுளை)
திரு பி. ஜி. உக்லொ (பண்டாரவளை)
திரு ஏ. மக்கி (டிக்கோயா)
திரு பி. சி. இன்ஸ் (டிம்புலை)
திரு கே. ஜே. இரத்வத்த (கண்டி)
திரு ஆர். சி. எச். பிரைஸ் (களனி)
திரு ஆர். கே. கிறிஸ்டி (நுவரேலியா)
திரு எச். டி. ரூஸ் (சப்பிரகமுவை)
திரு டி. இ. ஹெற்றியாராச்சி (தென்மாகாணம்)
திரு ஏ. டி. நீல் (தேயிலை வியாபாரத் தொழில்)

## நிலையத்தின் சிரேட்ட உத்தியோகத்தர்

கலாநிதி யு. பெத்தியாகொட (செயலாளர் / அழைப்பவர்)

இவ்வருடத்தில் அங்கத்தவர்களில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன :

ஏப்ரல், 4ம் திகதியிலிருந்து திரு வி. ஜி. டபிள்யு. ரத்னுயக்காவிற்குப் பதில் திரு டபிள்யு. ஜே. சில்டஸ்டன்.

செப்றெம்பர் 4ம் திகதியிலிருந்து திரு கே. ஜே. இரத்வத்தவிற்குப் பதில் திரு சி. விஜயனுயக்க.

### கூட்டங்கள்

ஐந்து குழுக்கூட்டங்கள், பெப்பிரவரி 15, மார்ச் 21, மே 2, ஆகஸ்ட் 1, அக்டோபர் 3 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

## நியமிக்கும் செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று நியமிக்கும் செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு :

திரு எப். அமரசூரியா (தலைவர்)
திரு சி. பி. சண்முகம்
திரு டி. இ. ஹெற்றியாராச்சி
திரு சி. ஆர். வரன்.
திரு டபிள்யு. தி. உவில்லியம்ஸ்
கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம்.
திரு ஜி. எம். ஸ்பாக்ஸ் (செயலாளர்)
மாற்றங்கள் எதுவுமில்லை.

#### கூட்டங்கள்

ஐந்து கூட்டங்கள் ஏப்ரல் 3, ஜூலை 31, செப்ரெம்பர் 3, நவம்பர் 27 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

## கட்டடச்செயற் குழு

ஜனவரி 1ம் திகதியன்று கட்டடச் செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு :

திரு எஸ். பி. வைத்திலிங்கம் (தலைவர்)
திரு எப். அமரசூரியா
திரு ஜி. பி. மிடில்டன்
கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம்.
திரு ஜி. எம். ஸ்பாக்ஸ் (செயலாளர்)

இவ்வருடத்தில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன :

செப்ரெம்பர் 4ந் திகதியிலிருந்து திரு ஜே. எல். டி. பீரிஸ் இச் செயற்குழுவில் அங்கம் வகித்தார்.

#### கூட்டங்கள்

இவ்வருடத்தில் பத்துக் கூட்டங்கள் ஜனவரி 9, மார்ச் 31, மே 4, மே 29, ஜூன் 23, ஜூலை 30, செப்ரெம்பர் 3, செப்ரெம்பர் 14, நவம்பர் 7, டிசெம்பர் 11 ஆகிய திகதிகளில் நடைபெற்றது.

## கீழ்ப்பிரதேச் நிலைய செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று இச்செயற்குழுவினங்கத்தவர்கள் பின்வருமாறு :

திரு எப். அமரசூரியா (தலைவர்)
திரு டி. இ. ஹெற்றியாராச்சி
திரு ஜே. எல். டி. பீரிஸ்.
திரு வி. ஜி. டபிள்யு. ரத்நாயக்க (சேர்க்கப்பட்டவர்)
திரு எச். டி. ஞுஸ் (சேர்க்கப்பட்டவர்)
திரு. ஜே. டபிள்யு. கிரேய்க் (அதிதிமுகவர், சென்ற் ஜோக்கிம் தோட்டம்).
கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம்.
திரு ஜி. எம். ஸ்பாக்ஸ் (செயலாளர், தே. ஆ. நி. சபை)
கலாநிதி எல். எச். பெர்னுண்டோ (கீழ்ப்பிரதேச விஞ்ஞான உத்தியோகத்தரும் செயலாளரும்)

இவ்வருடத்தில் அங்கத்தவர்களில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன :

திரு எஸ். பி. வைத்திலிங்கம், தலைவர், கட்டடச் செயற்குழு, செப்ரெம்பர் 4ந் திகதியிலிருந்து பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப் பட்டார்.

#### கூட்டங்கள்

இவ்வருடத்தில் இச்செயற்குழுவால் ஒன்பது கூட்டங்கள், பெப்பிரவரி 27, மே 19, ஜூன் 26, ஜூலை 24, ஜூலை 31, ஆகஸ்ட் 22, செப்ரெம்பர் 21, அக்டோபர் 27, நவம்பர் 28 ஆகிய திகதிகளில் நடத்தப்பெற்றன.

## விஞ்ஞான செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று இச்செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு :

கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம் (தலைவர்)
திரு எப். அமரசூரியா
திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு சி. ஆர். வரன்
திரு டபிள்யு. தி. உவில்லியம்ஸ்
திரு ஜி. எம். ஸ்பாக்ஸ் (செயலாளர்)

இவ்வருடத்தில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன : மே 2ம் திகதியிலிருந்து திரு சி. ஆர். வரனுக்குப் பதில் திரு எச். ஏ. உவிற்றுல்.

## கூட்டங்கள்

இவ்வருடத்தில் இச்செயற்குழுவால் ஐந்து கூட்டங்கள் ஜனவரி 16, மார்ச் 5, ஜுலை 29, நவம்பர் 23 ஆகிய திகதிகளில் நடத்தப்பெற்றன.

## பிரித்தானியாவிலுள்ள விஞ்ஞான ஆய்வுரைச் செயற்குழு

ஜனவரி 1ம் திகதியன்று இச்செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு :

கலாநிதி எப். ஆர். டப்ஸ், சி. பி. இ., அதிபர், கிழக்கு மொலிங் ஆராய்ச்சி நிலையம் (தலைவர்).

திரு எப். சி. பௌடன், எப். ஆர். எஸ்., அதிபர்
ரெதம்ஸ்டட் பரிசோதனை நிலையம்.

பேராசிரியர் தி. ஏ. பெனற் — கிளாக், எப். ஆர். எஸ். தாவரவியல் பேராசிரியர், கிங்ஸ் கல்லூரி, லண்டன் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஜி. இ. பிலக்மன், எப். ஆர். எஸ்.
கிராமப் பொருளியற் சிப்தோப்பியன் பேராசிரியர்,
ஒக்ஸ்பட் பல்கலைக் கழகம்.

மாற்றங்கள் எதுவுமில்லை

## தே. ஆ. நி. கனிட்ட உத்தியோகத்தர் வைத்திய நிதி முகாமைச் செயற் குழு

ஜனவரி 1ம் திகதியன்று முகாமைச் செயற்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு :

திரு எப். அமரசூரியா (தலைவர்)
திரு டபிள்யு. ஜே. சாமுவல்.
கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம்.

## தே. ஆ. நி. சேமநிதி நம்பிக்கைப் பொறுப்பாளர்

நம்பிக்கைப் பொறுப்பாளர் பின்வருமாறு :

திரு எப். அமரசூரியா (தலைவர்)
திரு ஆர். சி. பொயிஸ்
திரு டி. இ. ஹெற்றியாரச்சி
திரு ஆர். ஐ. பெரைரா
கலாநிதி ஏ, டபிள்யு. ஆர். ஜோக்கிம்.

இவ்வருடத்தில் பின்வரும் மாற்றங்களேற்பட்டன :

டிசெம்பர் 17ம் திகதியிலிருந்து திரு ஆர். சி. பொயிசுக்குப் பதில் திரு ஜே. எல். கப்பர்.

ஜூன் 2ந் திகதியிலிருந்து திரு எம். கே. வைத்திலிங்கம் அங்கம் வகித்தார்.

## அதிதி முகவர்கள்

திரு பி. ஆர். யூ. ஈஸ்டீல் ஏப்ரல் 23, அக்டோபர் 22 ஆகிய திகதிகளில் சென்ற் கூம்ஸ் தோட்டத்தைப் பார்வையிட்டார்.

திரு ஜே. டபிள்யு. கிரேய்க் பெப்பிரவரி 5, ஜூலை 17, நவம்பர் 13 ஆகிய திகதிகளில் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தைப் பார்வையிட்டார்.

## நிதி

இவ்வருடத்தின் வருமானம் ரூ 4,942,815/– ஆகும். இத்தொகை முந்திய வருடத்தின் வருமானத்திலும் பார்க்க ரூ. 23,849/- ஆல் அதிகரித்துள்ளது. முந்திய வருடத்தின் அதிகரிப்பாகிய ரூ. 54,739/- வுடன் ஒப்பிடுகையில் தேயிலைத் தீர்வை இவ்வருடம் ரூ. 20,615/- ஆல் குறைந்துள்ளது. சென்ற் கூம்ஸ் தோட்ட இலாபம் ரூ. 252,074/– ஆகும். முந்திய வருட இலாபம் ரூ. 222,078/- ஆகும். சென்ற் ஜோக்கிம் தோட்ட நட்டம் ரூ. 22,798/- விலிருந்து ரூ. 47,955/– ஆக அதிகரித்துள்ளது. வேறுவழிகளில் கிடைத்த வருமானம், அதாவது வட்டி ரூ. 94,906/- ஆகும்; கடை வாடகை ரூ. 2,700/– ; முளைவகைத்தடிகளின் விற்பனை ரூ. 6,220/- ; நானாவித வரவுகள் ரூ. 30,662/- ; மொத்தம் ரூ. 134,497/– ; 1963 ல் மொத்தம் ரூ. 120,028/–.

வருமானச் செலவு (தேய்வுமானத்தையும் முதலீட்டுத் தேய்வுமானத்தையும் நீக்கி) ரூ. 3,178,668/– ஆக அதிகரித்துள்ளது; முந்திய வருடத்தில் இத்தொகை ரூ. 2,923,995/– ஆகும். சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் தேறிய நிருவாக நட்டமாகிய ரூ. 47,955/– இதில் அடங்கியுள்ளது.

செலவுகள் முக்கியமாக பின்வருவனவற்றில் அதிகரித்திதுள்ளன :

| | | |
|---|---|---|
| சிரேட்ட உத்தியோகத்தர் வேதனம் | ரூ | 65,684 |
| கனிட்ட உத்தியோகத்தர் வேதனம் | ,, | 43,611 |
| கீழ் உத்தியோகத்தர் வேதனம் | ,, | 16,710 |
| நாட்சம்பளத் தொழிலாளர் | ,, | 24,721 |
| விஞ்ஞானநுண்தொழிற் இருப்புப் பொருட்களும் பொது நிருவாகச் செலவுகளும் | ,, | 26,978 |
| நூல் நிலையமும் பிரசுரங்களும் | ,, | 47,759 |
| நிருவாகம் | ,, | 15,267 |
| கட்டடங்களின் பராமரிப்பு | ,, | 22,992 |
| பொதுவான சேவைகள் | ,, | 6,668 |
| உத்தியோகத்தர் போக்குவரத்து | ,, | 5,095 |
| இரத்தினபுரி, கீழ்ப்பிரதேச நிலையம் | ,, | 55,917 |

செலவுகள் முக்கியமாகப் பின்வருவனவற்றில் குறைந்துள்ளன :

| | | |
|---|---|---|
| நடுத்தர உத்தியோகத்தர் வேதனம் | ரூ | 26,249 |
| நானாவித வேதனங்கள் | ,, | 452 |
| நானாவிதம் | ,, | 24,703 |

மூலதனச் செலவுகளின் தொகை ரூ. 3,755,408/– ஆகும்; முந்திய வருடத்தில் ரூ 1,803,339/-- ஆகும். செலவுகள் முக்கிய மாக பின்வருவனவற்றில் காணப்பட்டன.

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | ரூ | 2,389,904 |
| நிலமும் அபிவிருத்தியும் | ,, | 62,494 |
| தளபாடங்களும் இணைப்புகளும் | ,, | 192,195 |
| ஆராய்ச்சிக்கூட இணைப்புகள் | ,, | 180,844 |
| வாகனங்கள் | ,, | 104,651 |

கட்டடங்களில் செலவான ரூ. 2,389,904/–ல் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் கீழ்ப்பிரதேச நிலையத்திற்காகக் கட்டப்பெற்ற கட்டடங்களின் தொகையாகிய ரூ. 1,983,604/– அடங்கியுள்ளது. 1964, டிசெம்பர் 31ல் திரண்ட தேய்வுமானம் ரூ. 3,736,233/– ஆகும்.

நிலையத்தின் எளிதிற் காசாகும் சொத்து ரூ. 3,813,790/– ஆகும்; அரசாங்கக் கடனுகிய ரூ. 2,000,000/– உட்பட, மொத்தப் பொறுப்பு களின் தொகை ரூ. 2,764,442/– ஆகும்.

## நன்றி நவிலல்

லண்டனிலுள்ள இலங்கைச் சங்கம், இலங்கை தோட்டத்துரை மார்கள் சங்கம், இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம் ஆகி யோருக்கும் வேறு நிலையங்களுக்கும் தனி நபர்களுக்கும் அவர்கள் நிலையத்திற்கும், இலங்கைத் தேயிலைக் கைத்தொழில் சம்பந்தப்பட்ட விட யங்களுக்கும் உவந்தளித்த ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் சபை தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## வழக்கறிஞர்கள்

திருவாளர் யூலியஸ் அன் கிரிசி

## கணக்குப் பரிசோதகர்கள்

1964, டிசெம்பர், 31ல் முடிவடைந்த வருடத்தின் பரிசோதிக்கப் பட்ட கணக்குகளின் விபரக்கூற்றும், ஐந்தொகைக் கணக்கும் இவ்வறிக்கை யுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஏ. சி. பெரேரா,
செயலாளருக்காக
இலங்கை தேயிலை ஆராய்ச்சி
நிலையச் சபை.

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

தலவாக்கொல்லை,
25, மார்ச், 1966.

கௌரவ விவசாய, உணவு அமைச்சர்,
விவசாய, உணவு அமைச்சு,
330, யூனியன் பிலேஸ்,
கொழும்பு 2.

ஐயா,

1964, டிசெம்பர், 31ந் திகதி முடிவடைந்த ஆண்டின் கணக்குகள்

1961ம் ஆண்டின் 57ம் இல. இலங்கை தேயிலை ஆராய்ச்சிச் சட்டத்தின் 13 (8)ம் பிரிவிற்கிணங்க, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 1964ம் ஆண்டு பரிசோதித்த கணக்குகளின் ஒப்பமிடப்பட்ட பிரதியையும், கணக்குப் பரிசோதகர்களான போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனியினது அறிக்கையின் பிரதியையும், 1966, மார்ச், 3 எனத் திகதியிடப்பட்ட அவர்களின் பத்திரத்தையும் இத்துடன் அனுப்புகிறேன். கணக்குப் பரிசோதகரின் அறிக்கை சம்பந்தமாகப் பின்வரும் குறிப்புரைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்:

கணக்குப் பரிசோதகரின் அறிக்கையில் பக்கம் 2 — சபையின் பிரமாணங்கள் — தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் திருத்தப்பட்ட பிரமாணங்களைக் கொண்ட பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. இது, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

பக்கம் 2 — 31 – 12 – 64ல் உள்ள ஐந்தொகைக் கணக்கு : 1963ல் சென்ற் ஜோக்கிம் தோட்டப் பதவியினருக்கு வழங்கப்பட்ட மிகையூதியம் — சென்ற் ஜோக்கிம் தோட்ட ஊழியருக்கு மிகையூதியம் வழங்குவதற்குச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதே வழக்கமாக இருந்து வந்துள்ளது.

சபையின் பரிசோதனை தோட்டச் செயற்குழுவின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்ட போதும், தவறுதலாகச் சபை இதை அங்கீகரிக்கவில்லை. சபையின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரப்பட்டதும், 1966, மார்ச் 25ம் திகதியன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில், இதை அங்கீகரித்து ரூ. 1,863/33 சிபாரிசு பண்ணப்பட்டது.

பக்கம் 4 — வாக்குப் பணப்பேரேட்டின் பராமரிப்பு — வாக்குப் பணப்பேரேடு இன்றுவரை சீராக்கப்பட்டு தற்சமயமுள்ள செலவுகளையும் நிலுவைப் பொறுப்புக்களையும் தெளிவாகக் காட்டுகிறது.

பக்கம் 4 — நிலையத்திற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மிடையேயுள்ள தகராறு — இவ்விடயமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் மேலும் தொடர்பு நடைபெற்று வருகின்றது.

பக்கம் 4 — சில்லறை விநியோகத்தர்கள் — விநியோகத்தர்களையும் ஒப்பந்தக்காரர்களையும், கணக்குகளில் காட்டப்பட்ட தொகைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகளென உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

பக்கம் 4 — பிடிகாசு – 1966ம் ஆண்டின் கணக்கில் ஒப்பந்தத் திற்கிணங்க கட்டடங்கள் முடிவடைந்தவுடன் கணக்குப் புத்தகங்களில் பிடிகாசிற்கென் ஒழுங்குகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

பக்கம் 5 — பிறவுன் அன் கம்பனி உரிமை கோரும் விபரக் கூற்று — இவ்விடயமாக மேலும் திருவாளர்கள் பிறவுன் அன் கம்பனி லிமிட்டட் ஆகியோருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

பக்கம் 5 — நிலையான மூலதனங்கள் – கணக்குப் பரிசோதகர் களுடன் கலந்தாலோசித்து ஒரு புதிய திருத்தப்பட்ட நிலையான மூல தனங்களைக்கொண்ட பதிவேட்டைத்தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. குறிப்பிட்ட புதிய நிலையான மூலதனங்களைக்கொண்ட பதி வேட்டை நடைமுறைக்குக் கொண்டுவருவதை முன்னிட்டு, நிலையத்தால் பராமரித்துவரும் பொருட் பதிவேடுகளிலும், வேறு பதிவேடுகளிலும் பதிவு செய்யப்படும் பொருட்களைச் சரிபார்ப்பதற்கு ஒரு கணிப்புச் சபை நியமிக்கப்படும்.

பக்கம் 6 — கீழ்ப்பிரதேச நிலையம் – நிலையான மூலதனங்களின் விபரம் – இரத்தினபுரி கீழ்ப்பிரதேச நிலையத்தை நிறுவும் தொடக்க காலத்தில் மூலதனச் செலவுகளை பல்வேறு தலைப்புக்களின் கீழ் பிரித்துக் கணக்கு வைக்கப்படும்.

பக்கம் 5 — நிலையான மூலதனங்கள் — கணக்குப் பரிசோதகர் களுடன் கலந்தாலோசித்து, ஒரு புதிய திருத்தப்பட்ட நிலையான மூல தனங்களைக்கொண்ட பதிவேட்டைத்தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. குறிப்பிட்ட புதிய நிலையான மூலதனங்களைக்கொண்ட பதி வேட்டை நடைமுறைக்குக் கொண்டுவருவதை முன்னிட்டு, நிலையத்தால் பராமரித்துவரும் பொருட் பதிவேடுகளிலும், வேறு பதிவேடுகளிலும் பதிவுசெய்யப்படும் பொருட்களைச் சரிபார்ப்பதற்கு ஒரு கணிப்புச் சபை நியமிக்கப்படும்.

பக்கம் 6 — கீழ்ப்பிரதேச நிலையம் — நிலையான மூலதனங்களின் விபரம் — இரத்தினபுரி கீழ்ப்பிரதேச நிலையத்தை நிறுவும் தொடக்க காலத்தில் மூலதனச் செலவுகளை பல்வேறு தலைப்புக்களின் கீழ் பிரித்துக் கணக்கு வைக்கவில்லை. ஆயினும், பின்னர் இந்நிலைமை சீராக்கப்பட் டுள்ளது ; இது சம்பந்தப்பட்ட முந்திய வருடங்களின் விபரங்கள் முடியு மாயின் 1965ம் ஆண்டுக் கணக்குப் பரிசோதனைக்குத் தயாரிக்கப்படும்.

பக்கம் 6 — வரவு செலவு மதிப்பு — கணக்குப் பரிசோதகர்களின் குறிப்புரைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பக்கம் 7 — அபிவிருத்தியிலுள்ள வேலைகள் — கணக்குப் பரி சோதகர்களின் குறிப்புரைகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பக்கம் 8 — இரத்தினபுரி கீழ்ப்பிரதேச நிலையத்தில் அபிவிருத்தி யிலுள்ள கட்டட வேலைகள் — கட்டடங்களின் மேலதிக வேலைகளிற்கு 1964, செப்டம்பர், 4, 1965, மார்ச், 5 ஆகிய திகதிகளில் நடைபெற்ற சபைக் கூட்டங்களில் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

பக்கம் 9 — இலங்கை, பிரித்தானிய அரசாங்கப் பிணைகள் — சந்தை நிலை — எதிர்வரும் காலங்களில் முதலீடுகள் கொள்விலையில் காட்டப்படும். இம்மாற்றம் 1965ம் ஆண்டுக் கணக்குகளில் செயலாற் றப்படும்.

பக்கம் 10 — காகிதாதிகள் கொள்வனவு — அச்சடிக்கப்பட்ட காகிதாதிகளின் கையிருப்புக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது.

பக்கம் 10ம் 11ம் — சில்லறைக் கடனாளிகள் — நிலையத்தில் தொடர்ந்து கடமையாற்றும் உத்தியோகத்தரிடமிருந்து நிலையத்திற்கு கொடுக்கவேண்டிய தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

பக்கம் 11 — வேறு கடனாளிகள் — வங்களா வேலைக்காரர் — வங்களா வேலைக்காரருக்கு கடனுதவிகள் கொடுக்கப்படமாட்டாது.

பக்கம் 11 — ஜயதுங்கா அன் கம்பனி, ஒப்பந்தக்காரர்கள் — ரூ 122.65க் கொண்ட தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 12 — கடனாளிகள் : உத்தியோகத்தர் — நிலையத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகைகள் யாவற்றையும் உத்தியோகத்தர் நிலையத்தை விடும்பொழுது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

பக்கம் 11 — பாம்காடின் குரூப் — பாம்காடின் தொழிற்சாலையால் (சென்ற் ஜோக்கிம்) சவ்விரகம் தேயிலை, இரப்பர் கம்பனி லிமிட்டட் ஆகியோருக்கு தாழிவடிவமான உலர்த்தும் இயந்திரத்தை விற்றதால் அடைந்த ரூ 6,022.92 நட்டம் பதிவழிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 12 — அறவிடும் கணக்கு — இந்நிலைமையில் இக்கணக்கிலுள்ள வித்தியாசத்தைச் செம்மைப்படுத்த வியலாமையினால் ரூ 1,808.17க் கொண்ட தொகையை மேலதிகக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

பக்கம் 13 — சில்லறைக் காசு — கவலையீனமான வேலைகளினால் சில கணக்குகள் பிழையான நிரல்களில் பதியப்பட்டுள்ளன. இப்பிழைகள் தற்போது திருத்தப்பட்டுள்ளன ; 31—12—64ல் உள்ள மிகுதி செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.

பக்கம் 13 — உத்தியோகத்தரிடமுள்ள முற்பணம் — எஸ். ஜே. இலாசரசின் சேமநிதிக் கணக்கிலிருந்து ரூ 40/— அறவிடப்படும்.

பக்கம் 15 — சிரேட்ட விஞ்ஞான உத்தியோகத்தர் — போக்குவரத்துக் கட்டணங்களில் காணப்படும் வித்தியாசத்தை அறிவதற்கு இலங்கை விமான நிலையத்துடன் தொடர்பு கொள்ளப்படும் ; வேண்டின் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பக்கம் 16 — விஞ்ஞான நுண்தொழிற் இருப்புப் பொருட்களும் பொது தொழிற்படுச் செலவுகளும் — அதிபர், ஒவ்வொரு பிரிவும் அவற்றிற்கு வேண்டிய இருப்புப் பொருட்களை அப்பிரிவுகளே பராமரிக்க வேண்டுமெனக் கருதுகிறார். மூலப்பொருட்கள் வருவாய்க்கு எழுதப் படாவாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பக்கம் 16 — நூல் நிலையமும் பிரசுரங்களும் — நூல்நிலைய வாக்குப்பணத்தில் ஏற்பட்ட மேலதிகச் செலவு பற்றி ஆராயப்படுகிறது.

பக்கம் 16 — உள்ளகக் கணக்குப் பரிசோதனை — கணக்குப் பரிசோதகரின் குறிப்புரைகள் கவனிக்கப்பட்டுள்ளது. உதவி பரிபாலன உத்தியோகத்தரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் பயன்படுத்தக்கூடிய உத்தியோகத்தர்களைக்கொண்டு ஓர் உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதி நிறுவப்பட்டுள்ளது.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) எப். அமரசூரியா,
தலைவர்
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபை.

பிரதி: எஸ்/ஏ அன்ட் எப் — உறுதிப்படுத்தப்பட்ட கணக்குகளும் அவற்றின் பரிசோதிக்கப்பட்ட அறிக்கையும் —

திருவாளர்கள் போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனி, கணக்குப் பரிசோதகர்கள்.

எனது இல. டிடி — 5/52/5

கணக்குப் பரிசோதனைக் கந்தோர்,
கொழும்பு 7,
25, ஏப்ரல், 1966.

தலைவர்,
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபை,
தலவாக்கொல்லை.

## 1964ம் ஆண்டு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பரிசோதனை அறிக்கையும் கணக்குகளும்

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 1964ம் ஆண்டுக் கணக்குகளை எனது கண்காணிப்பின்கீழ் திருவாளர்கள் போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனி பரிசோதித்துள்ளனர்; இவர்கள் விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சரால் 1961ம் ஆண்டின் 57ம் இல. தேயிலை ஆராய்ச்சி (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட தேயிலை ஆராய்ச்சிக் கட்டளை சட்டத்தின் 13 (3)ம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவர்கள். 1964 டிசம்பர் 31ம் திகதியன்றுள்ள கணக்குக் கூற்றும் ஐந்தொகையும் முறைப்படி கணக்குப் பரிசோதகரால் உறுதிப்படுத்தப்பட்டு இத்துடன் அணைக்கப்பட்டிருக்கின்றன. 1961ம் ஆண்டின் 57ம் இல. தேயிலை ஆராய்ச்சி (திருத்தச்) சட்டத்தின் 13(7)ம் பிரிவிற்கிணங்க கணக்குப் பரிசோதகரின் அறிக்கையையும் எனது புறம்பான குறிப்புகளைக் கொண்ட இவ்வறிக்கையுடன் அனுப்புகிறேன்.

2. கணக்குப் பரிசோதகரின் அறிக்கையில் குறிப்பிட்டவாறு கணக்குகளில் காணப்படும் தவறுகள், நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள், எனது புறம்பான குறிப்புக்கள் ஆகியனவற்றில் சபை விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சபையால் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டவுடன் நிலைமை மேலும் கணக்குப் பரிசோதகரால் ஆராயப்படும்; வேண்டின் என்னாலும் ஆராயப்படும்.

3. நிலையான மூலதனங்கள் — ரூ 12,064,464. நிலையான மூலதனங்களின் விபரங்களைக்கொண்ட பதிவேடு இல்லாதவிடத்து, கணக்குப் பரிசோதகரால் ஐந்தொகைக் கணக்கில் இம்மூலதனங்கள் சரியென அத்தாட்சிப்படுத்த முடியவில்லை. ஓர் தகுதிவாய்ந்த நிலையான மூலதனங்களின் பதிவேடு தாமதமின்றித் தயாரிக்கப்பட்டு ஓர் கணிப்புச் சபையால் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மூலதனங்களை உருப்படி சரிபார்க்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. பொதுவானதும் மின்சாரக் கையிருப்புகளும் — ரூ 107,850 முந்திய வருடத்தின் இறுதியில் சரிபார்க்கப்பட்ட கையிருப்புகளுக்கும் காரியாலய கையிருப்பு அட்டைகள் காட்டும் மிகுதிகளுக்குமிடையேயுள்ள வித்தியாசங்கள் கணக்குப் புத்தகங்களில் சீராக்கப்படவில்லை. இதன் விளைவாக கையிருப்புகளின் மதிப்பு மேலதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. வேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

5. சில்லறைக் கடனுளிகள்.

இத்தலைப்பின்கீழுள்ள அறவிடமுடியாமல் காணப்படும் தொகைகள் சம்பந்தமாக அதிபர் பின்வருமாறு கூறியுள்ளார் :—

"குறிப்பிட்ட தொகைகள் அறவிடமுடியாமல் காணப்பட்டாலும், எம்மால் அறவிடக்கூடியளவை மீளுவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன. இத்தொகைகள் முன்வருடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டமையினுலும் அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் — முன்னை நாள் பிரதான பரிபாலன உத்தியோகத்தரும் உதவி பரிபாலன உத்தியோகத்தரும் நிலையத்தினின்று விலகிவிட்டமையினுலும், நான் இத்தொகைகளை முன் வருடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டமையை எந்தவொரு உத்தியோகத்தரின் கவலையீனமெனச் சுட்டிக்காட்டக்கூடிய நிலையிலில்லை" சகல நிலுவைக் கடன்களையும்கொண்ட விபரக்கூற்று இடையிடையே தயாரிக்கப்பட்டு, அத்துடன் அறவிடுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையும் சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் முக்கியமானதாகும்.

6. விஞ்ஞான நுண்தொழிற் இருப்புப்பொருட்கள் — பொது தொழிற்படுச் செலவுகள்.

(1) ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அதிகபெறுமதி வாய்ந்த பயன்படுத்தப்படாத பாவினைப்பொருட்கள் இருந்தபோதிலும், இவற்றின் பெறுமதி ஐந்தொகைக் கணக்கில் காட்டப்படவில்லை. மேலும், மூலதன இயல்பான சிலபொருட்களினுல் அடைந்த செலவுகள் வருவாயில் கழிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் கணக்குகள் உண்மை நிலையைக் காட்டுவதாயில்லை.

7. சில்லறைக் கடன் கொடுத்தவர்கள் :

சில உறுதிப்படுத்திய விபரக் கூற்றுகளே எம்மால் பெறப்பட்டன. இவற்றின் மிகுதிகளுக்கும் கணக்குப்புத்தக மிகுதிகளுக்குமிடையே வித்தியாசங்கள் காணப்பட்டும் நிலையத்தால் கணக்குப் பரிசோதகருக்குத் தகுந்த விளக்கங்கள் தரப்படவில்லை. எனவே, இவ்விடயம் ஐந்தொகைக் கணக்கில் சரியான நிலைமையைக் காட்டுகின்றதென்பதற்கில்லை.

8. நான் 1965 அக்டோபர் 31ம் திகதி எனது உத்தியோகத்தரொருவரை நிலையத்தின் பொருட்பதிவேடுகளையும் பணமிகுதிகளையும் ஆராயும்படி கட்டளையிட்டேன் ; இதன்விளைவாக அவதானிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகள் கணக்குப் பரிசோதகரால் அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(i) காசேடு

ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கி மிகுதிகள் செம்மைப்படுத்தப்படுவதை பொறுப்புள்ள உத்தியோகத்தர் சரிபார்த்து உறுதிப்படுத்தினுர் என்பதாகத் தெரியவில்லை.

(ii) சில்லறைக் காசேடு

சில்லறைக் காசு முற்பணமுறையில் கையாளப்படுவதில்லை. இதனுல், ஏறக்குறைய ரூ 25,000/— தொகையான பணங்கள் ஒரு மாதத்திற்குள் சில்லறைக்காசாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சில்லறைக் காசை ஓர் மேலதிகாரி இடையிடையே பரிசீலனை செய்வதில்லை. இக்காசு தினமும் சமப்படுத்தப்படாமலும் சில்லறைக் காசுப் பொறுப்பாளரிடமுள்ள பாக்கி இடையிடையே சரிபார்க்கப்படாமலும் காணப்படுகிறது.

(iii) சம்பளவேடு

சம்பளவேட்டில் எழுதப்படும் கணக்கு விபரங்கள் சம்பளம் வழங்கு மூன் சரிபார்க்கப்படுவதாய்த் தெரியவில்லை. மேலும், ஒவ்வொரு மாதத்திலுமுள்ள பல்வேறு கழிவுகளை மொத்தமாக அறவிடும்பொழுது அவை பேரேட்டில் அவ்வவ்கணக்குகளுடன் செம்மைப்படுத்தப்படுவ தில்லை.

(iv) இருப்புப் பொருட்களின் கொள்வனவு

(அ) எந்திரவியல்பகுதி தலைவர் இருப்புப் பொருட்களின் நேர டிப் பொறுப்பாளராகவிருந்து இருப்புப் பொருட்களின் விநி யோகத்திற்கு குறிப்பிட்ட விலைகளைக் கோருகிறார். இவ்விரண்டு கடமைகளையும் வெவ்வேறு உத்தியோகத் தர்கள் செயல்புரிய வேண்டும்.

(ஆ) 1964ல் ஒரு தனிநபரிடமிருந்து தளபாடக் கொள்வனவிற் காக ஏறக்குறைய ரூ 35,000/– செலவாகியுள்ளது. கொள் வனவுகள், போட்டி முறையில் விலைகளைக் கோரியபின் செய்ததாகத் தெரியவில்லை.

(v) எந்திரவியல்பகுதி மேற்பார்வையாளரால் மேற்கொண்ட தனிப் பட்ட வேலைகள்.

எந்திரவியல்பகுதித் தலைவர் உத்தியோகத்தரின் விண்ணப்பத்தின் பெயரில் தனிப்பட்ட வேலைகளை மேற்கொண்டுள்ளார். ஆயினும், பிர தான பரிபாலன உத்தியோகத்தர் எந்திரவியல்பகுதியால் மேற்கொள் ளப்படும் தனிப்பட்ட வே களின் சரியான வேதனங்கள் அறவிடப்படு கின்றதாவென கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

(vi) உத்தியோகத்தருக்கு வழங்கும் விநியோகங்கள்.

எந்திரவியல்பகுதியால் உத்தியோகத்தரிற்கு விநியோகிக்கும் பெற் றோல், மண்ணெண்ணெய் முதலியவற்றின் மாதாந்த அறவிடும் விப ரங்கள் கணக்குப்பகுதியால் அவ்வவ்விநியோக உத்தரவுப் பத்திரங்களு டன் சரிபார்க்கப்படுவதில்லை.

(vii) பிணை

நிலையத்தின் பணம் அல்லது இருப்புப் பொருட்களின் வரவு, பாது காவல் அல்லது விநியோகம் ஆகியனவற்றிற்குப் பொறுப்பாயுள்ள உத்தி யோகத்தர்கள் இன்றுவரை பிணைகள் ஏதும் கொடுக்கவில்லை.

(viii) காசோலைகளை மாற்றுவதற்கு வழங்கிய கட்டணம்

1964 ல் சம்பளம், வேறு சில்லறைக் காசுச் செலவுகள் ஆகியவற்றை வழங்குவதற்காக காசோலைகள் ஓர் தனிநபரிடம் மாற்றப்பட்டது; இதற்கென ரூ. 2,281 கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூர்க் கிளை யைக் கொண்ட வங்கியில் ஓர் கணக்கைத் தொடங்குவதால் இச்செலவைத் தவிர்க்கலாம்.

(ix) கொள்வனவுப் பத்திரங்களைத் தவறான முறையில் உறுதிப்படுத்துவ தால் காணப்படும் முறையற்ற பொருட் பதிவேடுகள்.

தற்பொழுது நடைமுறையிலுள்ளவாறு, கொள்வனவுப் பத்திரங்களை பணம் வழங்குவதற்காக பிரதான பரிபாலன உத்தியோகத்தர் உறுதிப் படுத்தும் பொழுது, பணம் வழங்கும் பத்திரங்களில் குறிப்பிட்ட விநியோகங்களிற்கு முறைப்படி பொருட் பற்றுச்சீட்டுகள் இருக்கின்றனவா வென்றும் கொள்வனவு செய்யப்பெற்ற பொருட்கள் முறையே பொருட் பதிவேடுகளில் சரியாகப் பதியப்பெற்றுள்ளனவாவெனவும் அவர் சரிபார்ப்பதில்லை. உள்ளகக் கட்டுப்பாட்டு முறையில் காணப்படும் இக் குறைபாட்டினுல் சகல பிரிவுகளிலும் முறையற்ற பொருட் பதிவேடுகள் தாபிக்கப் படுவதுமன்றி சகல பிரிவுகளின் பொருட் பதிவேடுகளில் பதியப்பெற்றுள்ள பொருட்கள் ஓர் கணிப்புச் சபையால் ஒவ்வொரு வருடமும் மதிக்கப்படாமலும் காணப்படுகிறது.

1962, பெப்பிரவரியில் அதிபர் இந்தியாவிலிருந்து இரு உத்தியோகத்தரை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சிக்கூட, மண்டலப் பிரதான இணைப்புகள் யாவற்றையும் விசேஷமாக உருப்படி சரிபார்க்க அழைத்து, அவர்கள் தமது வேலையைப் பூர்த்திசெய்து 1962, பெப்பிரவரி 27ம் திகதியன்று அதிபரிடம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தும் முறையான பொருட் பதிவேடுகள் தயாரிப்பதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(x) உள்ளகக் கணக்குப் பரிசோதனை

நிலையத்தின் அமைப்பிற்குள் தனிப்பட்ட முறையில் பரிசோதனை செய்யு மியக்கமாக முகாமைக்குச் சேவைபுரியுமடிப்படையில் கணக்குகள், நிதி, வேறு செயல்முறைகள் ஆகியவற்றை விமர்சிப்பதற்கேற்ற வகையில் உள்ளகக் கணக்குப் பரிசோதனை யமையவேண்டும். இதன் பிரகாரம் உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதியின் பொறுப்புக்கள் பின்வருமாறு :

(அ) கணக்கு வைத்தல், நிதி, செயல்முறைக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் தகுதித்திறன், நடைமுறைப் பாவனைகளை விமர்சித்தலும் மதிப்பிடுதலும் ;

(ஆ) வழங்கிவரும் திட்டங்கள், நோக்கங்கள், முறைகள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ள தரத்தைக் கணித்தல் ;

(இ) நிலையத்தின் மூலதனங்கள் கணக்கு வைக்கப்பட்டு எவ்வித நட்டங்களினின்றும் பாதுகாக்கப்பட்டுள்ள அளவைக் கணித்தல் ;

(ஈ) நிலையக் கணக்கு முறைகள், வேறு சம்பந்தப்பட்ட விடயங்கள் ஆகியவை சீராகவுள்ள நிலைமையைக் கணித்தல் ;

(உ) கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை கடமையுணர்ச்சியோடு செய்தலுக்குரிய தகுதித்திறனைக் கணித்தல்.

(ஒப்பம்) ஏ. பொன்னையா,
(கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபருக்காக)

அந்தரங்கமானதும் நம்பிக்கையானதும்

போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனி,
கொழும்பு.
26, மார்ச், 1966.

கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபதி,
கொழும்பு.

ஐயா,

**1964, டிசெம்பர், 31 ந் திகதி முடிவடைந்த ஆண்டின் கணக்குகள்**

மேற்கண்ட கணக்குகளை நாம் பரிசோதித்து முடித்ததன் பிரகாரம் பின்வருபனவற்றை இவ்வறிக்கையுடன் அணைக்கிறோம் :—

1. 1964, டிசெம்பர், 31 ந் திகதியன்றுள்ள ஐந்தொகைக் கணக்கும் அதுபற்றிய எமது அறிக்கையும்.

2. 1964, டிசெம்பர், 31 ந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தோட்ட நிருவாகக் கணக்குகள் :—

(அ) சென்ற் கூம்ஸ் தோட்டம்
(ஆ) சென்ற் ஜோக்கிம் தோட்டம்

3. 1964, டிசெம்பர், 31 ந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரவுசெலவுக் கணக்கு.

4. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள கடன் கொடுத்தோர்களினதும் ஒழுங்குகளினதும் சுருக்கம்.

5. 1964, டிசெம்பர், 31 ல் கொள்விலை, திரண்ட தேய்வுமானம், அன்றுள்ள பெறுமதி ஆகியவற்றைக் காட்டும் நிலையான மூலதனங்களின் சுருக்கம்.

6. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள முதலீடுகளின் சுருக்கம்.

7. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள கையிருப்புக்களின் சுருக்கம்.

8. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள கடனாளிகளினதும் வரவுமீதிகளினதும் சுருக்கம்.

9. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள கடனாளி உத்தியோகத்தரின் சுருக்கம்.

10. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள வைப்புப் பணங்களின் விபரம்.

11. 1964, டிசெம்பர், 31 ந் திகதியில் கையிலிருக்கும் பணத்தினதும் வங்கி மீதிகளினதும் சுருக்கம்.

12. 1964, டிசெம்பர், 31 ந் திகதி முடிவடைந்த ஆண்டின் வருமானக் கணக்கின் விபரமான செலவுகள்.

**1. இவ்வாண்டின் பலன்கள்**

இவ்வாண்டில் ரூ. 1.097,221.29 க் கொண்ட தொகை பின்வருமாறு மேலதிகமாகத் தேறியது :—

| | | |
|---|---|---|
| நிலையம்—செலவுக்கு அதிகமான வரவு | ரூ. | 893,101.79 |
| சென்ற் கூம்ஸ் தோட்டம்—நிருவாகத்தின் மேலதிகம் | ,, | 252,074.28 |
| | | ரூ.1,145,176.07 |
| கழிவு : சென்ற் ஜோக்கிம் தோட்டம்—நிருவாக நட்டம் | ,, | 47,954.78 |
| | ரூ. | 1,097,221.29 |

முந்திய வருடத்தின் மேலதிகம் ரூ. 1,361,122.72 ஆகும்.

## 11. சபையின் பிரமாணங்கள்

பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தர் திருத்தப்பட்ட பிரமாணங்களின் நகலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், ஆயினும் நிர்வாகச் செயற் குழுவால் இது விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லையென்றும் எம்மிடம் அறிவித்தார். இப் பிரமாணங்கள், கட்டளைச் சட்டத்திெனொரு பகுதியாகவிருப்பதால், இவை அமுலாக்கப்படுமுன் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## 111. 1964, டிசெம்பர், 31 ல் உள்ள ஐந்தொகைக் கணக்கு

(1) திரண்ட நிதி.—இவ்வாண்டில் இந்நிதி பின்வருமாறு கணக்கு வைக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1963, டிசெம்பர், 31 ல் உள்ள பாக்கி | ரூ. 11,977,921.01 |
| கூட்டு : முந்திய வருடத்திற்கான சீராக்கல் | ,, 1,770.43 |
| நிலையான மூலதனங்களின் விற்பனை இலாபம் | ,, 34,925.00 |
| முதலீடுகளை மீட்ட இலாபம் | ,, 2,175.00 |
| | ரூ. 12,016,591.44 |
| கூட்டு : செலவுக்கு அதிகமான வரவு | ,, 1,097,221.29 |
| 1964, டிசெம்பர், 31 ல் உள்ள பாக்கி | ரூ. 13,113,812.73 |

முந்திய வருடத்திற்கான சீராக்கல்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1963 ல் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் தேய்வுமானத்தை சீராக்கியது | ரூ. 34,905.78 | |
| வருமானத்தில் பதிவழிக்கப்பட்டதை மூலதனமாக்கியது | ,, 24,927.03 | |
| கடன் கொடுத்தவர்களுக்கு மேலதிக ஒழுங்களைப் பதிவழித்தது | ,, 77.38 | ரூ. 59,910.19 |
| | | ரூ. 59,910.19 |
| கழிவு: 1963 ல் மூலதனமாக்கிய வருமானங்களை சீராக்கியது | ரூ. 28,566.06 | |
| மிகையூதியம் : | | |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம் 1962 | ,, 775.00 | |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம் 1963 | ,, 1,863.33 | |
| சென்ற் கூம்ஸ் தோட்டம் 1963 | ,, 7,925.74 | |
| 1963 ல் திரு கிரேய்க்கிற்குக் கொடுக்கப்பட்ட மேலதிக அதிதிப்பணம் | ,, 500.00 | |
| வைத்திய நிதியில் திருப்பி கணக்கு வைக்கப்பட்ட மேலதிக வைத்தியச் செலவுகள் | ,, 1,001.74 | |
| 1963 ன் சேமநிதியின் நிர்வாக, முகாமைச் செலவுகள் | ,, 1,062.46 | |

| | | | |
|---|---|---|---|
| சபையால் அங்கீகரிக்கப்பட்ட அற விட முடியாத தொகைகளின் பதி வழிவு | ,, 8,001.70 | | |
| கலாநிதி டபிள்யு. தந்தநாராயண— 1963, டிசெம்பர் 31 வரையுள்ள சம்பளப் பாக்கி | 8,443.73 | ரூ. | 58,139.76 |
| திரண்ட நிதிக்குக் கொண்டுவரப் பட்ட எஞ்சிய தொகை | | ரூ. | 1,770.43 |

சென்ற் ஜோக்கிம் தோட்ட ஊழியருக்கு 1962 ல் மிகையூதியம் வழங்குவதற்கென சபை அங்கீகாரம் அளித்த 1964, செப்டம்பர் 4 ந் திகதியிடப்பட்ட சபைக் குறிப்பொன்று இருப்பதாகக் கவனித்துள்ளோம். ஆயினும், 1963 ல் இரு தோட்டங்களின் ஊழியர்கள் எவருக்காயினும் மிகையூதியம் வழங்குவதற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. மிகையூதியம் வழங்குவதற்கென அதிதிமுகவரின் வழமையான சிபார்சிசையாயினும் எமக்குக் காட்டவில்லை. முன்னைநாள் பிரதான பரிபாலன உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடனேயே பணம் வழங்கப்பட்டுள்ளது ; இவர் முன்னிருந்த வழமையின் பிரகாரமே இவ்வாறு செய்திருக்கிறரெனத் தெரிய வருகிறது. பணமாக இரண்டுமாத மூலச் சம்பளம், சேமநிதிக்கு ஒருமாத மூலச் சம்பளம் என்னுமடிப்படையில் பணம் வழங்கப்பட்டுள்ளது.

(2) சில்லறைக் கடன்கள்

சில்லறைக் கடன்கள் தலைப்பின்கீழ் பின்வருவன காணப்படுகின்றன :—

(அ) சில்லறை விநியோகத்தர்கள்

கணக்குப் பரிசோதனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் நகலில் 1964, டிசெம்பர் 31 ல் கடன்பட்ட பொறுப்பாகிய ரூ. 164,355.76 க் கொண்ட தொகைக்கு ஒழுங்குகள் செய்யப்படவில்லை. இவ்விடயத்தை நிலையத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் விளைவாக இக்கடன் பொறுப்பு கணக்குகளில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தவறின் கார ணத்தை ஆராய்ந்தவிடத்து, வாக்குப் பணப் பேரேடு, செலவுகளையும் நிலுவைப் பொறுப்புக்களையும் தெளியப்படுத்த வேண்டியதாக விருந்த போதும், சம்பந்தப்பட்ட விடயங்களை நேரடியாகத் தருவதற்கேற்ற முறை யில் அது பராமரிக்கப்பட வில்லையென்று தெளிவானது.

பணம் வழங்கப்படவிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்குகளை உறுதிப் படுத்தி எமக்கு நேரடியாக அனுப்புவதற்கு ஒழுங்கு செய்யுமாறு நிலையத்தை வேண்டினோம் ; எமக்குக் கிடைத்த மிகக் குறைவான உறுதிப்படுத்திய கணக்குகளிலுள்ள மீதிகளொன்றாயினும் நிலையப் புத்தகங்களிலுள்ள கணக்கு களுடன் ஒவ்வவில்லை. இவ் வித்தியாசங்களுக்குத் தகுந்த விளக்கங்கள் தரப்படவில்லை ; இத் தகுதிப் பத்திரங்களை மேலும் ஆராய்வதற்குப் போதிய நேரமில்லாமையினால் நாம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்வரும் காலத்தில் பிரதான விநியோகத்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிட மிருந்து உறுதிப்பத்திரங்கள் கோரப்பட வேண்டுமெனவும் கணக்குகளை முடிக்குமுன் இவை சரிபார்க்கப்பட வேண்டுமெனவும் அதிபரை வேண்டி யுள்ளோம்.

நிலையத்திற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு மிடையே கூட்டுத் தாபனத்திற்கு வழங்கவேண்டிய தொகை சம்பந்தமாகத் தகராறு இருப்பதாகத் தெரிகிறது ; இப் பிரச்சினை பற்றி மேலும் தொடர்பு

கொண்டுள்ளதாய் அறிந்தோம். இக் கணக்குகளை யொட்டி சமர்ப்பிக்கப் பட்ட புத்தகப் பாக்கிகளை ஏற்றுள்ளோம் ; நிலையக் கணக்குப் புத்தகங்களில் காணப்படும் திரண்ட கடன் பொறுப்புக்கள் பின்னர் தீர்த்து வைக்கப் பட்டுள்ளனவெனவும் அறிந்துள்ளோம்.

(ஆ) பிடிகாசு

இவ்வாண்டில் பல ஒப்பந்தங்கள் முடிவடைந்தும் இவை சம்பந்தமான பிடிகாசிற்கு சகல ஒப்பந்தங்களிலும் ஒழுங்குகள் செய்யப்படவில்லை. இது பெரும்பாலும் எந்திரவியல் பகுதி மேற்பார்வையாளருக்கும் காரியாலயத் திற்குமிடையேயுள்ள விளக்கக் குறைவினுல் ஏற்பட்டதாகும் ; கட்டடங்கள் எப்போது முடிவடைந்ததெனக் காரியாலயத்திற்குத் தெரியாத நிலை ஏற் பட்டுள்ளது.

(இ) பிறவுன் அன் கம்பனி லிமிட்டட்

1963 ல் தகராற்றிலிருந்த சில விடயங்களுக்காக ரூ. 28,851.04 ஒதுக்கப்பட்டுள்ளது. பணத்தை வழங்குமாறு கம்பனி கோரியதைச் சபை ஆலோசித்து கம்பனி விநியோகித்த மின்சார மேலதிகங்களுக்காக ரூ. 8,597.45 க் கொண்ட தொகையை வழங்க அங்கீகரித்தது. அபராதப் பணமாகக் கோரப்பட்ட ரூ. 11,162.59 ச் சபை நிராகரித்தது ; இத் தொகை உரிய மூலதனக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 1964, டிசெம்பர், 31 ல் கம்பனிக்கு வழங்க வேண்டிய பணம் ரூ. 7,025 ஆகும். உரிமை கோரும் இத்தொகை மேலும் ஆராயப்படுகின்றதெனவும் கால வரையில் தீர்த்து வைக்கப்படுமெனவும் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஸ்டாறேயின் இறுதிப்பத்திரம்

காலஞ்சென்ற திரு இ. ஜே. ஸ்டாறேயின் உறுதிமுடிப்பவர்களான திருவாளர்கள் யூலியஸ் அன் கிரீசியிடமிருந்து ப. 400 பெறப்பட்டுள்ளது. இப்பணத்தைப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை ; இதுபற்றி அதிபர் கவனிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளோம்.

1965 ம் வருடத்திற்கான அத்தாட்சிப் பத்திரங்களை ஆராய்ந்ததி லிருந்து நிலையத்தின் கணிசமான அளவுள்ள கடன் பொறுப்புக்கள் யாவும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படுகிறோம்.

(3) அரசாங்கக் கடன்

திறைசேரியிலிருந்து கோரப்பட்ட கடனுகிய ரூ. 2,000,000 வின் முழுத்தொகையும் இவ்வாண்டில் கிடைத்துவிட்டது. இத்தொகை வட்டி யில்லாது பன்னிரண்டு வருட காலத்திற்குள் அறவிடப்படும். திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் முதற் தவணைப் பணமாக ரூ. 166,667, 1965, பெப்பிரவரி, 19 ம் திகதியன்று கொடுக்கப்பட்டது.

(4) நிலையான மூலதனங்கள்

(அ) சரிபார்த்தல்

நிலையத்தின் இரு தோட்டங்களினது உரிமையுறுதிகளையும், நிலையத்தி லுள்ள வாகனங்களின் பதிவுப் பத்திரங்களையும் ஆராய்ந்ததிலிருந்து ரூ. 2,123,124.50 மதிக்கப்பட்ட மூலதனங்கள் இருப்பதாக அறிந்தோம். வேறு நிலையான மூலதனங்கள் ரூ. 9,941,340 ஆக மதிக்கப்பட்டுள்ளது. முந்திய சில வருடங்களாக இவ்வருடங்களின் மேலதிக வரவுகளைப் பதிவு செய்து சில பதிவேடுகள் பராமரித்து வரப்படுகின்றன. இவை முறையான நிலையாயுள்ள மூலதனங்களின் பதிவேடுகளெனக் கருதமுடியாவிட்டாலும், ஓர் கணிப்புச் சபையால் இம் மூலதனங்களின் இருப்பு சரிபார்க்கப்படவில்லை.

ஆயினும், எமது சென்ற அறிக்கையை யொட்டி ஓர் முறையான நிலையா யுள்ள மூலதனங்களின் பதிவேட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

1965, ஜனவரி, 28 ந் திகதியிடப்பட்ட எமது அறிக்கையில் இரத்தின புரி உப நிலையத்திலுள்ள நிலையான மூலதனங்களுக்குச் சேர்ந்த சகல மேலதிகங்களையும் ஒரு குறிப்பான தலைப்பிற்குக் கீழ் — 'கட்டடங்கள்—சென்ற் ஜோக்கிம்'— குறிக்கப்பட்டுள்ளனவெனக் கூறியுள்ளோம். பல்வேறு கட்டடங்கள், அவற்றின் தளபாடங்களின் கொள்விலை, நீர் விநியோகச் சேவை, சகல ஆராய்ச்சிக்கூட இணைப்புகள், காரியாலய தளபாடங்கள், பொருத்திகள் முதலிய யாவும் இத்தலைப்பில் அடங்கியுள்ளன. இக்கணக்கு ஆராயப்பட்டு உரிய பிரதான தலைப்புகளில் கணக்கு வைக்கப்படல் வேண்டு மென்னும் எமது சிபாரிசு பின்பற்றப்படவில்லை ; சம்பந்தப்பட்ட கட்டடங் களின் நிலத்தில் வெடிவைத்த, நிலத்தைச் சமப்படுத்திய செலவுகளைப் பிரித்து அவ்வவ் கட்டடச் செலவுடன் சேர்க்க வியலாமையினால் நாங்கள் இதைச் சீராக்க முடியவில்லை. நிலையத்தின் உத்தியோகத்தருக்கு 1963, 1964 ஆகிய வருடங்களின் மேலதிகச் சேர்க்கைகளின் விபரங்களைக் கொடுத்து இவற்றை மேலும் ஆராய்ந்து 1965 ல் உரிய கணக்குகளிற்கு இவை கொண்டுவரப்பட வேண்டுமெனவும் வேண்டியுள்ளோம். இவ்வாறு சீராக்கப் படின், இது, உப நிலையத்தின் நிலையான மூலதனங்களைக் கொண்ட பதிவேடாகப் பராமரிப்பதற்கேற்ற அடிப்படையாக விளங்கும்.

நிலையத்தின் மூலதனங்கள் போதிய நட்டவீட்டினால் ஈடு செய்யப் பட்டுள்ளதென்பதை அறிந்துள்ளோம்.

### (ஆ) வரவு செலவு மதிப்பு

மூலதன வரவு செலவு மதிப்பிலுள்ள செலவுகளைப் பரிசீலனை செய் வதற்கு, பிரஸ்தாப மூலதன மதிப்பைக் குறிக்கும் கணக்கிற்கும் வரவு செலவு மதிப்பின் வரிசை எண்ணிற்கு மிடையே யில்லாத தொடர்புகளினால், இதை எப்பொழுதும் பரிசீலனை செய்ய முடியாதிருந்தது. எதிர்வருங் காலத் தில், மூலதன வரவுசெலவு மதிப்புக்களைத் தயாரிக்கும்பொழுது பொதுப் பேரேட்டுப் பக்கத்தின் எண் குறிக்கப்பட வேண்டும் ; ஒவ்வொரு தலையங் கத்திற்குக்கீழுள்ள தொகையின் விபரங்களையும் காட்ட வேண்டும். உதாரண மாக, இரத்தினபுரி உப நிலையத்தின் மூலதன வரவு செலவு மதிப்பிலுள்ள 6 ம் இலக்கத் தலைப்பு — 'பரிசோதிக்கும் இயந்திர இணைப்புகளும் நீர் விநியோகமும் — ரூ. 158,920' என விவரிக்கப்பட்டுள்ளது. பரிசோதிக்கும் இயந்திர இணைப்பு, நீர் விநியோகம், ஆகியவற்றின் வரவு செலவு மதிப் புக்களை வெவ்வேறாகக் காட்டக்கூடிய முறையில் இத் தொகையைப் பிரிக்க வேண்டும்.

### (இ) அபிவிருத்தியிலிருக்கும் வேலை

ஒரே நேரத்தில் பல கட்டடங்களின் வேலைகள் நடைபெறுகின்றன ; நிருமாண சிற்பியின் தகுதிப் பத்திரங்களின் பிரகாரம் பணம் வழங்கப் படுகின்றது. இக் கணக்குகள் வாக்குப் பணப் பேரேடுகளில் பதிவு செய்யப் பெற்று வருட இறுதியில் உரிய பேரேட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப் படுகிறது. கட்டடங்கள் முடிவடைய சில வருடங்கள் செல்லுமாயினும், பொதுப் பேரேட்டில் மூலதனமாக்கல் கணிசமானளவில் நடைபெறாமை யினால் ஓர் நிலையான மூலதனங்களின் பதிவேட்டைத் தயாரித்துப் பரா மரிப்பதற்கு இதுவே முக்கிய பிரச்சனை தரும் காரணமாகவுள்ளது. கணக் கின் மூலம் வழங்கப்படும் பணங்கள் யாவும், கட்டட வேலைக்கெனக் கொடுக்கப்படும் கணிசமான பொருட்களும் ஓர் அபிவிருத்தியிலிருக்கும் வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்கிறோம் ; அத்துடன், கட்டடத்தின் நிலையம், வரவு செலவு மதிப்பு, கேள்வி மதிப்பு, ஒப்பந்தக்காரரின் பெயர், அங்கீகரிக்கப்பட்ட மேலதிகங்கள், வேறு சம்பந்தப் பட்ட விபரங்கள் ஆகியவற்றின் விபரங்களைக் காட்டும் பதிவேட்டைத்

தயாரித்துப் பராமரிக்கப்பட வேண்டும். பணம் பங்காகப் பிரித்துக் கொடுக் கப்பட்டு அபிவிருத்தியிலிருக்கும் வேலைக் கணக்கில் கழிவு வைத்தால் அக் கணக்கை பதிவேட்டிலும் உரிய பக்கத்தில் கழிவு வைத்தல் வேண்டும். ஒரு கட்டடம் முடிவடைந்ததும், நிருமாண சிற்பியின் கட்டணங்கள், பிடி காசு முதலியன குறிக்கப்பட்டு, அபிவிருத்தியிலிருக்கும் வேலைக் கணக்கிலும், பதிவேட்டுப் பக்கத்திலும் கழிவு வைத்தல் வேண்டும் ; சில்லறைக் கடன் களின் கணக்கில் இத்தொகை சேர்க்கப்பட வேண்டும். பதிவேட்டுப் பக்கத் திலிருந்து பெறப்பட்ட கட்டடத்தின் முழு மதிப்பையும் அபிவிருத்தியி லிருக்கும் வேலைக் கணக்கிலிருந்து பொதுப் பேரேட்டில் உரிய பேரேட்டுக் கணக்கிற்குக் கொண்டுவர வேண்டும். பதிவேட்டிலுள்ள பக்கங்களை ஒன்று சேர்த்தால் அவை ஒரு நிலையான மூலதனப் பதிவேடாக அமைவன. எந் நேரத்திலாயினும், அபிவிருத்தியிலிருக்கும் வேலைக் கணக்கு பதிவேட்டின் தனித்தனிப் பக்கங்களின் மொத்த மீதிக்குச் சமமாக விருக்க வேண்டும். இச் சிபார்சைத் தாமதமின்றி நடைமுறையாக்கல் வேண்டும். இவ்வாறு செய்யாவிடின், எந்நேரத்திலாயினும் அபிவிருத்தியிலிருக்கும் வேலையின் அளவையோ ஒப்பந்தக்காரர்கள், நிருமாண சிற்பிகள் முதலியவர்களுக்கு கொடுக்க வேண்டிய கடன் பொறுப்புக்களையோ நிர்ணயிக்க வியலாதாகும்.

இரத்தினபுரி உப நிலையத்தில் செய்த பின்வரும் மேலதிகக் கட்டட வேலைகளுக்கு கட்டடச் செயற்குழுவின் அல்லது சபையின் அங்கீகாரம் கிடைத்ததாக எமக்குத் தெரியவில்லை ; ஆயினும், இவ்வேலைகளை முறைப்படி அங்கீகரித்திருக்க வேண்டுமென அதிபர் எமக்கு உறுதிப்படுத்துகிறார் :—

| | | |
|---|---|---|
| நடுத்தர உத்தியோகத்தர் வங்களாக்கள் 1 ம், 2 ம் | ரூ. | 16,042.29 |
| பி. எச். எஸ். டி சில்வா கட்டிய 3 கனிட்ட உத்தியோகத் தர் விடுதிகள் | ,, | 33,202.79 |
| பி. எச். எஸ். டி சில்வா கட்டிய 2 கனிட்ட உத்தியோகத் தர் விடுதிகள் | ,, | 11,782.79 |
| டபிள்யு. எம். அப்புகாமி கட்டிய கீழ் உத்தியோகத்தர் விடுதிகள் | ,, | 8,256.33 |
| எஸ். சி. பெர்னாண்டோ அன் பிறதர்ஸ் கட்டிய 3 கனிட்ட உத்தியோகத்தர் விடுதிகள் | ,, | 22,322.18 |
| சிரேட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள் | ,, | 15,098.16 |
| | ரூ. | 106,704.54 |

இம்மேலதிக வேலைகளுக்கு நிருமாண சிற்பியின் தகுதிப் பத்திரத்தின் பிரகாரம் பணம் வழங்கப்பட்டுள்ளது ; இவற்றிற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்படாமலிருப்பின், சபை இவற்றிற்கு அங்கீகாரம் வழங்க வேண்டு மென வேண்டிக்கொள்கிறோம்.

நிலத்தைச் சமப்படுத்துவதற்கும், அதற்கு வெடிவைப்பதற்குமான செலவுகளைத் தவிர்த்து, சென்ற் ஜோக்கிமில் கட்டப்பட்ட தொழிற்சாலையின் மொத்தச் செலவு ரூ. 1,565,041.54 ஆகும். இதையொட்டிய இயந்திர இணைப்புகளின் கொள்விலை ரூ. 634,813.94 ஆகும் ; இத்தொகை இவ் வறிக்கையுடன் இணைக்கப்பட்ட விபரத்திலுள்ளவாறு உரிய தலையங்கத்திற் குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஈ) நிலையான மூலதனங்களின் விற்பனை

பின்வரும் நிலையான மூலதனங்கள் இவ்வருடத்தில் விற்கப்பட்டன :—

1. பெஜோ ஸ்டேஷன் வண்டி 2 ஸ்ரீ 3592.

2. சென்ற் கூம்ஸ் தொழிற்சாலையின் காய்ச்சும் இயந்திரமும் உலர்த்தும் காற்றோட்டியும்.

இம்மூலதனங்கள் விற்கப்படுமுன் அவற்றின் முழுத் தேய்வுமானம் கணக்குப் புத்தகங்களில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது ; எனவே, கொள் விலையும் தேய்வுமானமும் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்ட அட்டவணை யில் பதிவழிக்கப்பட்டுள்ளது. இவ் விற்பனையால் தேறிய பணமாகிய ரூ. 34,925 மேலதிகக் கணக்குடன் சேர்க்கப்பட்டுள்ளது.

*(5) இலங்கை பிரித்தானிய அரசாங்கப் பிணைகள் சந்தை நிதி ரூ 540,091.42*

இலங்கை அரசாங்கப் பிணைகளின் கட்டுப்பணப் பத்திரத்தை பரி சீலனை செய்து அது கணக்குப் புத்தகங்களில் ரூ. 517,112.50 பெறுமதியாக வுள்ளதென அறிந்துள்ளோம். புத்தகங்களில் காணப்பட்டவாறு ரூ. 62,362.82 பெறுமதியான பிரித்தானிய அரசாங்கப் பிணைகளின் கட்டுக் காப்பையொட்டி உறுதியொன்றும் எமக்களிக்கப்படவில்லை. 1964, டிசெம்பர், 31 ல் இம்முதலீடுகளின் சந்தை மதிப்பு ரூ. 540,091.42 ஆகும். சபையின் கட்டளைப்படி ஐந்தொகைக் கணக்கில் முதலீடுகளின் சந்தை மதிப்புக் காட்டப்பட்டுள்ளது ; முந்திய வருடத்தின் தேய்வுமான மாகிய ரூ. 3,883.58க் கொண்ட தொகையை வருமானத்தில் பதி வழிக்கப்பட்டுள்ளது.

முதலீடுகள் சம்பந்தமாக, அவற்றை ஐந்தொகைக் கணக்கில் கொள் விலையில் காட்டி, அவற்றின் சந்தைமதிப்பை ஓர் குறிப்பினுல் விளக்கப் படுவதே வழக்கம். நிலையத்தில் நடைமுறையிலிருந்த இவ் வழக்கத்தை ஒரு சில வருடங்களுக்குமுன் மாற்றி முதலீடுகளின் பெயரளவின் மதிப்புக்கும் கொள்வனவு விலைக்குமுள்ள மேலதிகத்தை கொள்வனவுத் திகதிக்கும் மீட்க வேண்டிய முதற் திகதிக்குமிடையே சமமாகப் பதிவழிக்கப்படலாமெனச் சிபார்சு செய்திருந்தோம். பின்னர், முதலீடுகளை சந்தை மதிப்பில் காட்டு மாறு சபை தீர்மானித்தது. முதலீடுகளைக் கொள்விலையில் காட்டுவதே தகுந்த முறையாக விருப்பதால் இம் மாற்றம் 1965 ல் அமுலாக்க வேண்டு மென சிபார்சு செய்கிறோம்.

*(6) கையிருப்பு*

இவ்வறிக்கையுடன் இணைக்கப்பெற்ற அட்டவணையில் நிலையத்திலுள்ள கையிருப்புக்களின் சுருக்கம் தரப்பட்டுள்ளது.

வருட இறுதியில் பொதுவானதும் மின்சாரக் கையிருப்புக்களினதும் உருப்படி சரிபார்க்கப்பட்டு, 1964ல் ஏற்பட்ட வித்தியாசம் காரியாலய கையிருப்பு அட்டைகளில் சீராக்கப்பட்டது. ஆயினும், இத் திகதிக்கு முன்னேற்பட்ட கையிருப்பின் வித்தியாசம் சீராக்கப்படவில்லை. உருப்படி யாகவிருக்கும் கையிருப்புகளுக்கும் காரியாலய கையிருப்புப் புத்தகங் களுக்குமிடையே தற்பொழுதுமுள்ள வித்தியாசம் ரூ. 2,521.71 பெறுமதி யானதாகும். 1965 ம் வருட இறுதியில், காரியாலய கையிருப்புப் புத்தகங் களுக்கும் உருப்படியான கையிருப்புகளுக்குமிடையே வேற்றுமையில்லாத வாறு இவ்வித்தியாசங்கள் கழித்தெழுதப்பட வேண்டும்.

மேற்கூறிய கையிருப்புகளில் காகிதாதிகளின் கையிருப்பு அடங்கவில்லை. காகிதாதிகளின் கொள்வனவு, கொள்வனவு செய்த திகதியன்று வருமானத் தில் பதிவழிக்கப்பட்டுள்ளது. நாம் காகிதாதிகள் வைக்கப்படும் பண்ட சாலைக்குச் சென்று அவற்றின் கொள்வனவு, விநியோகம் ஆகிய முறைகள் பற்றி விசாரித்தோம். நிலவும் வழக்கம் சீரானதாகக் காணப்பட்டாலும் சில அச்சடிப்புக் காகிதாதிகள் பெருமளவில் எஞ்சியுள்ளன ; இவற்றைப் பல வருடங்களுக்கு விநியோகிக்கக்கூடியதாகவிருக்கும். அச்சடிப்புக் காகி தாதிகளைப் பொறுத்தவரையில், அவற்றின் மாதிரி காலத்திற்குக் காலம் மாற்றமடையக் கூடியதால், பெருமளவில் இவற்றைக் கொள்வனவு செய் வதைத் தவிர்க்க வேண்டும்.

*(7) கடனுளிகளும் வேறு வரவு மீதிகளும்*

கடனுளிகள், வேறு வரவு மீதிகளைக் கொண்ட அட்டவணை இவ்வறிக்கையுடன் இணைக்கப் பெற்றுள்ளது. எமது குறிப்புரைகள் பின்வருமாறு :—

*(அ) வேறு கடனுளிகள் — ரூ. 13,000.95*

இத்தலைப்பின் கீழ் காணப்படும் பின்வருவன அறவிட முடியாதெனத் தெரிகிறது :—

| | | |
|---|---|---|
| பிலிமோரியா, டி சில்வா, பீரிஸ், பண்டிதரத்ன — தேயிலை விற்பனை | ரூ. | 160.29 |
| கலாநிதி டி. எல். கண் | ,, | 155.02 |
| ஜி. பி. இராஜபக்ச — முன்னைநாள் உத்தியோகத்தர் | ,, | 5.55 |
| டபிள்யு. ஜே. ஏ. வன்லன்ஜன்பர்க் | ,, | 35.41 |
| பெயர்வல் தோட்டம் | ,, | 37.01 |
| இ. எல். சீகல் | ,, | 50.39 |
| உருளைக்கிழங்கு விற்பனை (விபரங்கள் இல்லை) | ,, | 65.55 |
| மோசஸ் ஜெயரத்தினம் — முன்னைநாள் உத்தியோகத்தர் | ,, | 15.60 |
| தே.ஆ.நி. விடுதி (கனிட்ட உத்தியோகத்தர்) | ,, | 5.10 |
| விளம்பரங்கள் | ,, | — |
| 1963—பொசன்கே அன் ஸ்கிறைன் | ரூ. | 150.00 |
| இந்திய விளம்பர அலுவலகம் | ,, | 40.00 |
| காலி தோட்ட முகவர் நிலையம் | ,, | 270.00 |
| எம். எம். சல்காடோ | ,, | 60.00 |
| பெயர் தெரியாத கடனுளி | ,, | 6.40 |
| | ரூ. | 526.40 |

இவ்விடயம் சம்பந்தமாக வேறு பல சீரான கணக்குகளைக் கவனித்துள்ளோம் ; ஆயினும், இவை சரிபார்க்கப்பட்ட திகதியில் அறிவிடப்படவில்லை. நிலையத்தில் கடமையாற்றும் பல உத்தியோகத்தரிடமிருந்து பல்வேறு தொகைகள் அறவிட வேண்டியிருந்தும் இவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உதவி பரிபாலன உத்தியோகத்தரிடம் இவற்றைச் சுட்டிக்காட்டி, வேலையைக் காலிசெய்த உத்தியோகத்தரின் விடயத்தில், சேம நிதிப் பிரமாணங்களுக்கிணங்க, நிலையத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய தொகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் விண்ணப்பிக்குமாறு கூறியுள்ளோம். முன்னைநாள் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூ. 266.41 ஆகும்.

உத்தியோகத்தரின் வங்களா வேலைக்காரர்களுக்கும் விறகு, தேயிலை முதலியன கொள்வனவு செய்வதற்காக கடன் கொடுக்கப்படுகின்றது. இவர்கள் நிலையத்திற்கு அறிவித்தல் கொடுக்காது உத்தியோகத்தரிடமிருந்து விலகுவதால் இத்தொகைகள் அறவிடப்படுவதில்லை. உத்தியோகத்தரல்லாதவரிடமிருந்து இவ்வாறு அறவிடும்முறை உத்தியோகத்தரின் கடமைக்குச் சிரமமாகவிருப்பதால் இவ்வாறான தொகைகளை அவ்வவ் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டும் அல்லது பணமாக வழங்கும் அடிப்படையில் இவ்விடயம் பராமரிக்கப்படல் வேண்டும்.

*(ஆ) ஜயதுங்கா அன் கம்பனி — ஒப்பந்தக்காரர்கள் — ரூ. 122.65.*

மேற்கண்ட பாக்கி ஒப்பந்தக்காரருக்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களின் கொள்விலையைக் குறிக்கின்றது ; இத்தொகை அறவிடப்படுவதை எதிர்பார்க்க முடியாதென அறிந்தோம்.

(இ) பாம்காடின் குரூப் — ரூ. 59,022.92.

மேற்கண்ட தொகை தாழிவடிவமான உலர்த்தும் இயந்திரத்தை பாம் காடின் தொழிற்சாலையில் நிறுவியதன் செலவாகும் ; இது, பின்னர், சவ் விரகம் தேயிலை, இரப்பர் கம்பனி லிமிட்டட் ஆகியோருக்கு விற்கப்பட்டது. 1965 ல் இக் கம்பனி ரூ. 53,000 இது சம்பந்தமாக முழுமையாகவும் இறுதியாகவும் கொடுத்துத் தீர்த்துக் கொண்டது ; சபையின் அங்கீகாரத் துடன் பாக்கி மேலதிகத்தில் கழித்தெழுதப்பட வேண்டும்.

(ஈ) ஜி. பி. டி சில்வா — ரூ. 350.50

மேற்கண்ட தொகை, திரு. ஜி. பி. டி சில்வாவின் வாகனத்துடன் நிலையத்தின் வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக நிலையத்தின் வாகனத்தைத் திருத்தியதன் செலவாகும். பின்னர் இப்பணம் அறவிடப் பட்டுள்ளது.

(8) கடனுளிகள் — உத்தியோகத்தர்

(அ) 1964, டிசெம்பர், 31 ல் உத்தியோகத்தரின் நிலுவைக் கடன்கள் ரூ. 92,680.97 ஆகும் ; பெருநாள் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட கடன் பாக்கிகள், பெருந்துயரக் கடன்கள், வாகனக் கடன்கள், வீடுகளின் தளபாட இணைப்புகளுக்காக வழங்கப்படும் கடன்கள் முதலியன இவற்றில் அடங்கியுள்ளன. நிலையத்திலிருந்து வேலையைக் காலிசெய்த உத்தியோகத்தரி டமிருந்து ரூ. 2,045.13க் கொண்ட பல தொகைகள் அறவிடவேண்டி யிருக்கின்றன. இப்பணங்களை அறவிடுவதற்காக சேமநிதி நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு விண்ணப்பிக்குமாறு உதவி பரிபாலன உத்தியோகத்த ருக்குச் சுட்டிக் காட்டியுள்ளோம். ஒரு உத்தியோகத்தர் வேலையைக் காலி செய்யும் பொழுது அவருக்கு வழங்கப்படும் இறுதிப் பணத்திலிருந்து நிலுவை யாகவுள்ள கடன்கள் யாவற்றையும் ஏன் அறவிடப்படுவதில்லையென்று எமக் குப் புரியவில்லை.

(ஆ) மண்ணெண்ணெய் அடுப்பு முற்பணம்

இவ்விடயத்திலும் வேலையைக் காலிசெய்த உத்தியோகத்தரிடமிருந்து ரூ. 564.13 நிலுவையில் உள்ளது. இவற்றை சேமநிதி நம்பிக்கைப்பொறுப் பாளரிடமிருந்து அறவிட வேண்டும்.

(இ) அறவிடும் கணக்கு

இக்கணக்கு, உத்தியோகத்தர் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியேயாகும் ; பிழைகள் யாவும் சீராக்கப்பெற்றதும் இக்கணக்கின் தொகை ரூ. 6,710.55 ஆகும். செம்மைப் படுத்தப்பெற்ற இக் கணக்கை நாம் பரிசீலனை செய்ததும் ரூ. 8,518.72 அறவிட வேண்டியிருந்து பின்னர் அற விடப்பட்டுள்ளதெனவும் புரிந்தது. இதன் வித்தியாசமான ரூ. 1,808.17 செம்மைப் படுத்தப்படவில்லை. இது சம்பந்தமாக முந்திய வருடத்தில் வரவு மீதியாகவிருந்த ரூ. 2,247.43 மேலதிகக் கணக்கில் கழித்தெழுதப் பட்டுள்ளது. இக் கணக்கு எப்பொழுதாயினும் செம்மைப் படுத்தப்பட்ட நிலையிலிருக்கவில்லை ; எனவே, பணம் அறவிடும் முறைகள் மாற்றியமைக்கப் பட வேண்டும் அல்லது சம்பளங்கள் வழங்கப்பட்டதும் இக்கணக்கு ஒவ் வொரு மாதமும் செம்மைப்படுத்தப்படல் வேண்டும். இதுகாறுமுள்ள பிரச் சனை யாதெனில் கணக்கைச் செம்மைப் படுத்துவதற்கெடுக்கப்படும் முயற்சி வருட இறுதியிற்றான் செய்யப்படுகின்றது ; நிலையத்தில் நடைபெறும் பெரு மளவு கொடுக்கல் வாங்கலின் விளைவாக இந்நேரத்தில் கணக்குகளைச் செம் மைப்படுத்துவது சிரத்தையாகவிருக்கும்.

*(9) வைப்புப் பணங்கள்*

*வைப்புப்பணக் கணக்கில் இலங்கை ஓட்சிசன் லிமிட்டட் ஆகியோருக் கெதிரே ரூ. 550 காணப்படுகிறது. 1964, டிசெம்பர் 31 ல் அக்கம்பனி ஒருவித வைப்புப் பணமும் கணக்கில் வைக்கவில்லையென எமக்கு உறுதி யளித்துள்ளது. இக்கணக்கை பரிசீலனை செய்தபொழுது உருளைகளுக்காக அக்கம்பனி கோரிய தொகையை நிலையம் வைப்புப் பணமாகக் கருதியுள்ளது. இத்தொகை 1965 ல் பதிவழிக்கப்பட்டுள்ளது.*

*(10) வங்கியிலும் கையிலுமிருக்கும் பணம்*

*(அ) சில்லறைப்பணம்*

*நாம் நிலையத்தை யடைந்தபொழுது, முன் அறிவித்தலின்றி உதவிச் செயலாளரிடமுள்ள சில்லறைப் பணத்தைக் கணித்தோம். கையிலிருக்கும் பணம் 1966, ஜனவரி, 3 ம் திகதியன்றுள்ள கணக்குப் புத்தக மீதிகளுடன் சமமாகவிருந்தது.*

*கணக்கு பரிசோதிக்கும் காலத்தில், பொதுப் பேரேட்டின் சில்லறைப் பணக் கணக்கு மீதிக்கும் சில்லறைப் பணக் கணக்குப் புத்தக மீதிக்கு மிடையே வித்தியாசமிருந்தது. இக் கணக்கை நுணுக்கமாகப் பரிசோதித்த தன் விளைவாக கொடுக்கல், வாங்கல் ஆகியவை பிழையான நிரல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கவனித்தோம். இதன் பயனாக, பல வரு மானக் கணக்குகளும், நகல் கணக்குகளிலுள்ள கையிலிருக்கும் சில்லறைப் பணமும் பிழையாகக் காட்டப்பட்டுள்ளது. இப்பிழைகள், செய்யும் வேலை யில் கவனத்தையும் பொறுப்பையும் காட்டாததன் விளைவாக ஏற்பட்டுள் ளன. இப்பிழைகளைக் கண்டுபிடித்துத் திருத்துவதற்கு தீவிரமான ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டியிருந்தது.*

*(ஆ) உத்தியோகத்தரிடமுள்ள முற்பணம்*

*இதன் கீழ் வாகனச் சாரதிகளின் படிப்பணமாக முற்பணக் கணக்கில் ரூ. 295 இருந்தது. எஸ். ஜே. இலாசரசிடம் கொடுக்கப்பட்ட முற்பண மாகிய ரூ. 40 அவர் வேலையைக் காலிசெய்யும்பொழுது அறவிடப்படவில்லை.*

*(4) தோட்ட நிருவாகக் கணக்கு*

*(1) சென்ற் கூம்ஸ் தோட்டம்*

*இவ்வருடத்தில் உற்பத்தியாக்கப்பட்ட தேயிலை 306,717 று ஆகும் ; இதன் விற்பனையிலிருந்து கிடைத்த தொகை ரூ. 897,334 ஆகும் : மொத்த மாக இறுத்தலுக்கு சராசரி விற்பனை விலை ரூ. 2.92. முந்திய வருடத்தில் 314,204 று விற்பனையாகியது : மொத்தமாக இறுத்தலுக்கு சராசரி விலை ரூ. 2.49. முளைவகைத் தடிகளின் விற்பனையிலிருந்து ரூ. 18,473 கிடைத் தது ; முந்திய வருடத்தில் ரூ. 28,387 கிடைத்தது. தரகுக்கூலி, ஏற்று மதிக் கட்டணங்கள், பெறுமதி விற்பனைவரி ஆகியன அடங்கிய உற்பத்திச் செலவு இறுத்தலுக்கு ரூ. 2.16 ஆகும். நிருவாகத்தின் விளைவான இலாபம் ரூ. 252,074 ; முந்திய வருடத்தில் ரூ. 222,078 ஆகும். நிலையத்தால் தோட்டச் செலவிற்கு வழங்கிய பங்கு ரூ. 61,065 ; எனவே, இத் தொகையைக் கழித்தால் தோட்ட நிருவாகத்தினால் அடைந்த இலாபம் ரூ. 191,009 ஆகும்.*

*(2) சென்ற் ஜோக்கிம் தோட்டம்*

*இவ்வருடத்தில் பறிக்கப்பட்ட பச்சையிலை 1,623,833 று ; இதன் விற்பனையினின்று ரூ. 333,431 கிடைத்தது. தோட்டச் செலவுகளாலேற்*

பட்ட தொகை ரூ. 332,118 ; நிருவாகத்தின் விளைவாக அடைந்த நட்டம் ரூ. 47,955 ஆகும் ; முந்திய வருட நட்டம் ரூ. 22,797 ஆகும்.

(v) வரவு செலவுக் கணக்கு

**(1) தேயிலைத் தீர்வை**

பிரதான சுங்கச் சேகரிப்பாளரின் அறிக்கையின்படி ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை 455,658,407 இருத்தலாகும். இதன் விளைவாகக் கிடைத்த தீர்வையினாலும் வெளிக்கப்பற்றுறைகளினின்று கிடைத்த பற்றுவரவுகளினாலும் தேறிய தொகை ரூ. 4,556,243.94.

(2) நானாவித பற்றுவரவுகள்

இத்தலைப்பின்கீழ் ரூ. 11,966 க் கொண்ட தொகை அடங்கியுள்ளது ; இப்பணம் இழைப்புழுவியற் பிரிவிற்காக ஐக்கிய அமெரிக்க தூதராலயத்தால் வழங்கப்படும் சலுகையாகும். முந்திய வருடத்தில் கிடைத்த தொகை ரூ. 37,982 ஆகும்.

(3) வரவுசெலவு மதிப்பு

வரவு செலவுக் கணக்கு, வரவு செலவு மதிப்பைப் போன்று வகுக்கப்பட்டுள்ளது. இது நிலையத்திற்கு வெவ்வேறு உத்தியோக வகுப்பினரின் செலவைக் காட்டுகிறது. ஆயினும், நிலையத்திற்கு ஒவ்வொரு பிரிவின் செலவையும் இது காட்டவில்லை. பிரிவுகளின் செலவினடிப்படையில் மாற்றியமைப்பது அல்லது கணிப்பது அத்தியாவசியமானதா அல்லது பயனுள்ளதா வெனக் கூறுவதற்கு எம்மால் இயலாதிருக்கின்றது.

(4) சிரேட்ட விஞ்ஞான உத்தியோகத்தர்

ஒப்பந்தங்கள், சபைக் குறிப்புகள் முதலியவற்றைக் கொண்டு சிரேட்ட உத்தியோகத்தருக்கு வழங்கும் சம்பளங்களை சரிபார்த்துள்ளோம். கலாநிதி ஜி. டபிள்யு. சன்டசன் — உயிரின விரசாயனவறிஞன், 1964, டிசெம்பர், 15 ந் திகதியிலிருந்து லீவில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் ; கலிபோனியாவிற்கு பிரயாணப் போக்குவரத்துச் செலவுகளுக்காக ரூ. 25,456 வாக்குப்பணம் 5 ல் கழிக்கப்பட்டுள்ளது. ஆயினும், சபையிடம் லீவிற்காக விண்ணப்பம் செய்யப்பட்டபொழுது பிரயாணச் செலவிற்காக புறம்பான வரவுசெலவு மதிப்பு கோரப்படாததையும் அது வழங்கப்படாததையும் கவனித்தோம். இலங்கை விமான நிலையத்தின் அத்தாட்சிப் பத்திரம் எமது பரிசீலனைக்குத் தரப்படவில்லை. 1962, ஆகஸ்ட், 3 ம் திகதியிடப்பட்ட சபைக் குறிப்பின்படி பிரித்தானிய நாட்டு உத்தியோகத்தரல்லாதவற்கு 'பி அன் ஓ தனி நடுத்தர முதற் வகுப்புப் பிரயாணத்திற்குச் சமமான அடிப்படையில்' பிரயாணப் பணம் வழங்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. இக் குறிப்பு எமக்குத் தெளிவாகவில்லை ; மேலும் நிலையம் பிரயாணச் செலவின் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியை மாத்திரம் வழங்கவேண்டுமோ என்பதுபற்றி எம்மால் கணிக்க முடியவில்லை. கலாநிதி சன்டசனின் உத்தியோக நியமிப்புப் பத்திரம் அவரின் லீவு காலத்திற்கு உல்லாச விமான வகுப்பின் பணம் தான் வழங்கப்படுமெனக் கூறுகிறது. நாங்கள் இலங்கை விமான நிலையத்திலிருந்து அத்திலாந்திக்கூடாக உல்லாசப் பிரயாணக் கட்டணம் ரூ. 22,896 எனவும் பசிபிக்கினூடாக ரூ. 23,920 எனவும் அறிந்துள்ளோம்.

(5) நானாவித வேதனங்கள்

மேலதிக நேர வேலைக்கென ஒதுக்கப்பெற்ற ரூ. 10,000 பின்னர் ரூ. 5,000 க் கொண்ட புறம்பான வாக்குப்பணத்தால் அதிகரிக்கப்பட்டது. மேலதிக நேர வேலைக்கு இறுதியில் செலவாகிய தொகை ரூ. 16,320 ஆகும்.

(6) விஞ்ஞான நுண்தொழிற் இருப்புப் பொருட்களும் பொது நிர்வாகச் செலவுகளும்

ஒவ்வொரு விஞ்ஞானப் பிரிவும் விஞ்ஞான இருப்புப் பொருட்களுக்காக தமது கட்டளை அட்டவணையைத் தயாரிக்கின்றன ; இப் பொருட்களில் பெரும்பாலானவை சகல பிரிவுகளிற்கும் பொதுவானவை. ஒவ்வொரு பிரிவும் தனது இருப்புப் பொருட்களைப் பராமரிக்கின்றது. இவைகள் நீண்ட காலப் பாவினைப் பொருட்களல்லாததால் அல்லது பாவினையிலுள்ள இரசாயனப் பொருட்களாவதால் கொள்வனவு செய்ததும் வருமானத்தில் இவை பதிவழிக்கப்படுகின்றன. வெவ்வேறு பிரிவுகள் தனித்தனியே இருப்புப் பொருட்களைப் பராமரிப்பதால் ஒவ்வொரு வருட இறுதியில் எஞ்சும் பாவிக்கப்படாத பொருட்களின் மதிப்பு கணிசமான அளவாகக் காணப்படும்; இது ஐந்தொகைக் கணக்கிற்குக் கொண்டுவரப்படுவதில்லை.

வெவ்வேறு பகுதிகளின் கட்டளை அட்டவணைகளைப் பரிசோதித்ததிலிருந்து, வழமையாக மூலதன வாக்குப்பணத்தில் கொள்வனவு செய்து நிலையப் புத்தகங்களின் மூலதனக் கணக்கில் எழுதப்படவேண்டிய சில நீண்ட காலப் பாவிப்புப் பொருட்களை, வருமானக் கணக்கின் பெயரில் கட்டளை அட்டவணை தயாரித்து வருமானத்தில் கழித்தெழுதப்பட்டுள்ளதெனக் கவனித்துள்ளோம். இதன் காரணம் எமக்குப் புரியவில்லை. இவ்வாறான முறை பிழையானதென நாம் நம்புவதால் அதிபர் இவ்விடயத்தைத் தாமதமின்றி சீராக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

(7) நூல்நிலையமும் பிரசுரமும்

பிரசுரத்திற்கென தொடக்கத்தில் ஒதுக்கப்பெற்ற ரூ. 20,500 பின்னர் ரூ. 38,000க் கொண்ட உபமான்ய வாக்குப் பணத்தால் அதிகரிக்கப்பட்டது ; எனவே, இதன் மொத்த ஒதுக்கீடு ரூ. 58,500 ஆகும். பிரசுரங்களுக்காக ஏற்பட்ட இறுதிச்செலவு ரூ. 70,509. ஆகவே, வரவு செலவு மதிப்புக்கு மேலதிகமாக ரூ. 12,000 செலவாகியுள்ளது.

(vi) உள்ளகக் கணக்குப் பரிசோதனை

எழுது வினைஞரொருவர் உள்ளகக் கணக்குப் பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்ளக கணக்குப் பரிசோதக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் இப்பகுதியால் மேற்கொள்ளப்படும் வேலையினளவை எம்மால் கணிக்க முடியவில்லை. கணக்குப் புத்தகங்களின் நிலைமையிலிருந்தும் எம்மால் செய்யப்பட வேண்டியிருந்த கணக்குப் பதிவியல் வேலையினளவிலிருந்தும் இப்பகுதியால் பயனுள்ள வேலையாதேனும் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. நாம், இப்பகுதியால் பல முக்கிய வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தற்பொழுதுள்ளவாறு கணக்குவைக்கும் வேலைகளினின்று உள்ளகக் கணக்குப் பரிசோதகர் நீக்கப்பட வேண்டுமெனக் கருதுகிறோம். இவர்,கணக்குவைக்கும் உத்தியோகத்தரின் வேலைகளை விபரமாக பரிசீலனை செய்து அவற்றாலேற்படும் குறைபாடுகளைஅதிபரிடம் அல்லது வேறு சிரேட்ட உத்தியோகத்தரிடம் முறையிடுவதற்கு, இவருக்குப் போதிய சுதந்திரமளிக்க வேண்டும்.

(vii) உள்ளகக் கட்டுப்பாடு

நிலையத்தில் நடைமுறையிலிருக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளைப் பரிசீலனை செய்ததன் பயனாக எமது குறிப்புரைகள் பின்வருமாறு :—

நிலையத்தின் பெரும்பான்மையான வருமானம் பிரதான சுங்கச் சேகரிப்பாளரிடமிருந்து பெறப்படுகிறது. பற்றுவரவுகள் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாடு போதுமானதாகும்.

சில்லறைப் பணக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாடு, அவற்றைப் பதிவுசெய்யும் முறையில் காணப்படும் ஒரு சில குறைபாடுகளைத் தவிர, சீராகவுள்ளது.

நிலையத்தின் பெரும்பான்மையான கணக்குவைக்கும் வேலை பணம் வழங்குவதனுடன் சம்பந்தப்பட்டது. காசோலைகள் வழங்கப்பெற்று, இவை காணமற் போய்விட்டனவெனக் கூறப்பட்டதும், முதல் வழங்கிய பணத்துடன் சரிபார்க்காமல் புதிய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ஒரு முறை பணம் வழங்கியவிடத்து பணப் புத்தகங்களில் இரு பதிவுகள் செய்யப்பட்டுள்ளன ; இவற்றை வருட இறுதியில் ஆராய்ந்து சீராக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் கவனத்தைச் செலுத்தியிருப்பின் இவ்வாறான மேலதிக வேலையைத் தவிர்த்திருக்கலாம். மேலும், செல்லுபடியாகாத காசோலைகள் எமது பரிசீலனைக்கு எப்பொழுதும் கிடைக்கவில்லை. இவ்வாறான காசோலைகள் நிலையத்திற்கு திருப்பியனுப்பப் பட்டதும் இவை அங்கீகாரம் பெறாது சிதைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரருக்கும் மற்றயவருக்கும் பணம் வழங்கிய முறைகள் சீராகக் காணப்படுகிறது. ; ஆயினும், இரத்தினபுரி, கீழ்ப் பிரதேச நிலையத்தில் இடம் பெற்றுள்ள பெரும் கட்டடத் திட்டங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் காரருக்கும் வழங்கிய மொத்தமான தொகைகள் விபரமாகப் பதியப்படா மையினால் ஒப்பந்தக்காரர் கோரும் உரிமைகளை சரிபார்க்க முடியவில்லை.

நடப்புவருடத்தில், இருப்புப் பொருட்களின் கொள்வனவு ஓர் மத்திய கொள்வனவுத் தாபனத்திலிருந்து பெறப்படவில்லை. பொருட்களின் விநியோகப் பட்டியல்கள் பண்டசாலைப் பொறுப்பாளரால் உறுதிப்படுத்தப் படுகிறது. பொருட்கள், எப்பொழுதும் பண்டசாலையை யடையாது வெவ்வேறு இடங்களில் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறான மத்திய பண்டசாலையில்லாமையினாலும், பொருட்கள் பெறப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகம் பராமரிக்கப்படாமையினாலும் பணம் வழங்கப்படுமுன் கோரப்பட்ட பொருட்கள், உண்மையில் பெறப்பட்டனவாவென எம்மால் எப்பொழுதும் கணிக்க முடியவில்லை. இக்குறை, புதிய உதவிப் பரிபாலன உத்தியோகத்தரால் சீராக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக, உதவி பரிபாலன உத்தியோகத்தர் ஓர் கணக்குக் கரும முறையை அல்லது கைநூல் பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென சிபாரிசு செய்கிறோம். இவ்வாறு தயாரிப்பின், கணக்குக் கருமமுறையினின்று தவறு யாதாயினும் ஏற்படின், இத் தவறுகளை கைநூற் பிரமாணங்களினின்று இலகுவில் அறிந்துவிடலாம்.

மேலும் தகவல் வேண்டின் இவற்றைத் தருவதற்கு மகிழ்ச்சியடைகிறோம்.

இங்ஙனம்

உங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) போட், ரேட்ஸ், தோன்டன் அன் கம்பனி.

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

**1964, டிசெம்பர், 31 ல் உள்ள ஐந்தொகைக் கணக்கு**

| 1963 ரூ. | | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|
| | திரண்ட நிதி | | |
| | 1963, டிசெம்பர், 31 ம் திகதியிலுள்ள மீதி .. .. | 11,977,721.01 | |
| | முந்திய வருடச் சீராக்கல் .. .. | 1,770.43 | |
| | நிலையான மூலதனங்களை விற்ற இலாபம் .. .. | 34,925.00 | |
| | முதலீட்டை மீட்ட இலாபம் .. .. | 2,175.00 | |
| | | 12,016,591.44 | |
| 11,977,721 | இவ்வருடத்தின் செலவுக்கு அதிகமான வரவு .. | 1,097,221.29 | 13,113,812.73 |
| 573,617 | கடன்களும் ஒழுங்குகளும் .. .. | | 764,442.88 |
| 2,000,000 | அரசாங்கக் கடன் .. .. .. | | 2,000,000.00 |
| 14,551,338 | | | ரூ.15,878,255.61 |

| 1963 ரூ. | | ரூ. ச. | ரூ. ச | |
|---|---|---|---|---|
| | நிலையான மூலதனங்கள் | | | |
| | 1963 டிசெம்பர் 31 ல் கொள்விலை .. | 12,130,955.78 | | |
| 12,130,956 | இவ்வாண்டில் செலுத்தப்பட்டவை போக சேர்க்கைகள் .. .. .. | 3,669,742.06 | 15,800,697.84 | |
| | 31-12-63 ல் பதிவழித்த தேய்வுமானம் ... | 3,235,677.69 | | |
| 3,235,678 | நடப்பு வருடத்தில் பதிவழித்த தேய்வுமானம் —செலுத்தப்பட்டவை போக .. | 500,555.89 | 3,736,233.58 | |
| 8,895,278 | | | | 120,64,464.26 |
| | இலங்கை, பிரித்தானிய அரசாங்கப் பிணைகள் | | | |
| 761,800 | சந்தை மதிப்பு .. | | | 540,091.42 |
| | நிகழும் மூலதனம் — கையிருப்பு | | | |
| | விற்பனையாகியபொழுது தேயிலை விலை | 97,285.31 | | |
| | பொதுவான மின்சாரக் கையிருப்பு | 107,849.98 | | |
| | தோட்ட கையிருப்பு | 23,429.98 | | |
| | இரத்தினபுரி — கீழ்ப் பிரதேச உப—நிலைய கையிருப்பு | 7,654.92 | 236,220.19 | |
| | கடனாளிகளும் வேறு வரவு மீதிகளும் | | 761,629.54 | |
| | கடனாளிகள—உத்தியோகத்தர் | | 104,573.48 | |
| | வைப்புப்பணம் | | 23,189.46 | |
| 4,894,260 | கையிருப்பும் வங்கிகளிலுள்ள மீதியும் .. | | 2,148,087.26 | 3,273,699.93 |
| 14,551,338 | | | | ரூ.15,878,255.61 |


| 1963 ரூ. | | ரூ. ச | |
|---|---|---|---|
| | கடனாளிகளும் வேறு வரவு மீதிகளும் .. | 761,629.54 | |
| | கடனாளிகள் — உத்தியோகத்தர் .. | 104,573.48 | |
| | வைப்புப்பணம் .. | 23,189.46 | |
| 4,894,260 | கையிருப்பும் வங்கிகளிலுள்ள மீதியும் .. | 2,148,087.26 | 3,273,699.93 |


மேலேயுள்ள ஐந்தொகைக் கணக்கை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பரிசோதித்து எமக்கு வேண்டிய தகவல்கள், விளக்கங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டோம். இத்துடன் இணைக்கப் பெற்ற 1966, மார்ச் 26 ம் திகதியிடப்பட்ட எமது அறிக்கையில் குறிப்பிட்டதைவிட, மேற் சொல்லப்பட்ட ஐந்தொகைக் கணக்கு 1964, டிசெம்பர் 31 ம் திகதியன்று இந்நிலையத்தின் நிதி நிலைமையை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் அது சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்று எமக்கு அளிக்கப்பட்ட தகவல்கள், விளக்கங்களைக் கொண்டும் புத்தகங்கள் காட்டியிருப்பதைக் கொண்டும் அபிப்பிராயப்படுகிறோம்.

(ஒப்பம்) போட், ரேரட்ஸ், தோன்டன் அன் கம்பனி,
தத்துவம் பெற்ற கணக்காளர்.
கொழும்பு, 1966, மார்ச், 26.

(ஒப்பம்) எப். அமரசூரியா, தலைவர்,
(ஒப்பம்) இ. எம். செனரி, அதிபர்,
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலைய சபையின் சார்பாக.

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

### 1964, டிசெம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டின் சென்ற் கூம்ஸ் தோட்ட தொழிற்படு கணக்கு

| 1963 ரூ. | | | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|---|
| | | தோட்டச் செலவு | | |
| | 123,943 | பொதுச் செலவுகள் .. .. | 129,311.43 | |
| | 92,613 | மண்டல வேலைகளும் பயிராக்கலும் .. .. | 101,899.00 | |
| | 225,413 | உற்பத்தி .. .. | 256,819.89 | |
| 441,969 | | | | 488,030.32 |
| 10,950 | | கொழும்பு தரகு, ஏற்றுமதிக் கட்டணங்கள் .. .. | | 14,441.77 |
| 112,340 | | பெறுமான விற்பனை வரி .. .. .. | | 161,062.00 |
| 111 | | விற்பனை வரியில் வரவு வரி .. .. .. | | 162.69 |
| 23,011 | | பதிவழித்த வியாதியடைந்த நாற்றுப் பயிர்கள் .. .. | | — |
| 222,078 | | வரவு செலவுக் கணக்கு மீதி .. .. | | 252,074.29 |
| 810,459 | | | | ரூ. 915,771.06 |

| 1963 ரூ. | | | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|---|
| | தேயிலை விற்பனை — மொத்த வியாபாரம் | | | |
| | கொழும்பு .. .. | 283,745ரு. | 878,658.99 | |
| | உள்ளூர் பீ.ஓ.பி. .. .. | 3,549 ,, | 6,718.35 | |
| | உள்ளூர் பீ. எம். .. .. | 14,059 ,, | 10,697.00 | |
| | தூள் .. .. | 42 ,, | 66.78 | |
| | உயிரின விரசாயனப் பிரிவு .. .. | 491 ,, | 1,193.13 | |
| | இலவசம் .. .. | 48,831 ,, | — | |
| 782,072 | | 306,717 ,, | | 897,334.25 |
| 28,387 | முளைவகைத்தடிகளின் விற்பனை .. .. .. | | | 18,436.81 |
| 810,459 | | | | ரூ. 915,771.06 |

### 1964, டிசெம்பர் 31 ம் திகதி முடிவடைந்த ஆண்டின் சென்ற் ஜோக்கிம் தோட்ட தொழிற்படு கணக்கு

| 1963 ரூ. | | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|
| | தோட்டச் செலவு | | |
| 108,007 | பொதுச் செலவுகள் | 129,548.20 | |
| 138,043 | மண்டல வேலைகளும் பயிராக்கலும் | 128,992.54 | |
| 122,366 | உற்பத்தி | 123,572.43 | 382,113.17 |
| 368,416 | | | ரூ. 382,113.17 |

| 1963 ரூ. | | | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|---|
| 342,464 | பச்சை இலை விற்பனை (1,623,833 ரு.) | | 333,431.41 | |
| 3,040 | இரப்பர் பரப்பின் இலாபம் .. .. | 584.88 | | |
| 110 | முளைவகைத்தடிகளின் விற்பனை .. .. | 142.10 | | |
| 5 | நில வாடகை .. .. .. | — | 726.98 | 334,158.39 |
| 22,797 | வரவுக்கு அதிகமான செலவு .. .. .. | | | 47,954.78 |
| 368,416 | | | | ரூ. 382,113.17 |

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

### 1964, டிசெம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டு வரவுசெலவுக் கணக்கு

| 1963 ரூ. | | ரூ. ச. |
|---|---|---|
| 499,935 | சிரேட்ட உத்தியோகத்தர் வேதனம் | 565,619.02 |
| 241,297 | நடுத்தர உத்தியோகத்தர் வேதனம் | 215,048.97 |
| 375,432 | கனிட்ட உத்தியோகத்தர் வேதனம் | 419,043.38 |
| 159,103 | கீழ் உத்தியோகத்தர் வேதனம் | 175,813.88 |
| 44,697 | நானாவித வேதனம் | 44,245.18 |
| 95,189 | நாட்சம்பள தொழிலாளர் | 119,910.28 |
| 220,200 | விஞ்ஞான, நுண்தொழிற் பண்டசாலையும் பொதுதொழிற்படு செலவுகளும் | 247,178.40 |
| 49,091 | நூல்நிலையமும் பிரசுரங்களும் | 96,850.62 |
| 144,783 | நிர்வாகம் | 160,050.75 |
| 80,287 | கட்டடங்களையும் இணைப்புகளையும் பராமரித்தல் | 103,279.94 |
| 180,210 | பொதுவான வேலைகள் | 185,878.47 |
| 159,581 | உத்தியோகத்தர் போக்குவரத்து | 164,676.20 |
| 90,446 | நானாவிதம் | 65,743.45 |
| 147,346 | கீழ்ப் பிரதேச நிலையம்—இரத்தினபுரி | 203,263.25 |
| 350,000 | சிறுகாணிகள் ஆலோசனைச்சேவை (தேயிலை கட்டுப்பாட்டுப் பகுதி) | 350,000.00 |
| 63,599 | தோட்டச் செலவுப் பங்கு—சென்ற் கூம்ஸ் | 61,065.09 |
| 633,849 | தேய்வுமானமும் பதிவழித்த தொகைகளும் | 615,088.87 |
| 3,645 | முதலீட்டு தேய்வுமானம் | 3,883.58 |
| 1,361,123 | செலவுக்கு அதிகமான வரவு மிகுதி | 1,097,221.29 |
| 4,892,523 | | ரூ. 4,894,860.62 |

| 1963 ரூ. | | | ரூ. ச. |
|---|---|---|---|
| | தோட்டத்தொழிற்படு கணக்கின் மிகுதி | | |
| 222,078 | சென்ற் கூம்ஸ் | +252,074.28 | |
| 22,798 | சென்ற் ஜோக்கிம் | — 47,954.78 | 204,119.50 |
| 4,576,853 | தேயிலைத் தீர்வை | | 4,556,243.94 |
| 62,483 | வட்டி | | 94,906.01 |
| 2,640 | வாடை | | 2,700.03 |
| 37,982 | நானாவித பற்றுவரவுகள் | | 30,661.77 |
| 5,620 | முளைவகைத் தடிகளின் விற்பனை | | 6,229.40 |
| 7,660 | நிலையான மூலதனங்களை விற்ற இலாபம் | | |
| 4,892,523 | | | ரூ. 4,894,860.62 |

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

### 1964, டிசெம்பர் 31–ம் திகதியன்றுள்ள நிலையானமூலதனம்

| | 31-12-63 ல் பெறுமதி | 1964 ல் சேர்க்கைகள் | சீராக்கல் வ | சீராக்கல் ப | கொள்விலையில் கொடுக்கப்பட்டவை | 31-12-1964 ல் தேறிய பெறுமதி | 31-12-1963 ல் தேய்வுமானம் | 1964 ல் தேய்வு மானம் | விற்பனையில் அல்லது நிராகரித்ததில் தேய்வு மானம் | 31-12-1964 ல் திரண்ட தேய்வுமானம் | 31-12-1964 ல் உள்ள பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சென்ற் கூம்ஸ் தோட்டம் .. .. .. | 1,300,867.85 | 37,665.52 | — | — | — | 1,338,533.37 | — | — | — | — | 1,338,533.37 |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம் .. .. .. | 639,146.50 | 15,335.15 | — | — | — | 654,481.65 | 34,905.78 | — | 34,905.78 | — | 654,481.65 |
| நீர் விநியோகம்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 621,858.06 | 5,470.50 | — | — | — | 627,328.56 | 294,762.65 | 54,709.35 | — | 349,472.00 | 277,856.56 |
| நீர் விநியோகம்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | 19,179.00 | 4,024.45 | — | — | — | 23,203.45 | 1,917.90 | 1,917.90 | — | 3,835.80 | 19,367.65 |
| ஆராய்ச்சிக்கூடமும் காரியாலயமும்—சென்ற் கூம்ஸ் .. .. | 738,061.69 | 72,033.02 | 334.14 | 3,680.67 | — | 806,748.18 | 148,578.06 | 29,388.61 | — | 177,966.67 | 628,781.51 |
| ஆராய்ச்சிக்கூடமும் காரியாலயமும்—சென்ற் ஜோக்கிம் .. .. | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிரேட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் கூம்ஸ் .. .. | 1,140,279.66 | 23,958.76 | — | 1,250.00 | — | 1,162,988.42 | 235,760.40 | 45,611.18 | — | 281,371.58 | 881,616.84 |
| சிரேட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் ஜோக்கிம் .. | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| நடுத்தர உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் கூம்ஸ் .. | 340,153.98 | 28,514.29 | 956.16 | — | — | 369,624.43 | 15,186.97 | 13,644.41 | — | 28,831.38 | 340,793.05 |
| நடுத்தர உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் ஜோக்கிம் .. | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| கனிட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் கூம்ஸ் .. | 1,543,482.99 | 114,371.25 | 956.15 | — | — | 1,658,810.39 | 165,325.38 | 61,777.57 | — | 227,102.95 | 1,431,707.44 |
| கனிட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள்—சென்ற் ஜோக்கிம் .. | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| பலவினக் கட்டடங்கள்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 720,964.70 | 108,679.70 | 1,375.84 | 10,381.16 | — | 820,639.08 | 216,714.66 | 28,249.39 | — | 244,964.05 | 575,675.03 |
| பலவினக் கட்டடங்கள்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிறு கட்டடங்கள்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 751,776.33 | 18,918.17 | — | — | — | 770,694.50 | 303,316.70 | 30,071.06 | — | 333,387.76 | 437,306.74 |
| விளையாட்டுக்கூடம்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 68,080.36 | — | — | — | — | 68,080.36 | 10,167.17 | 2,723.21 | — | 12,890.38 | 55,189.98 |
| தொழிற்சாலை—சென்ற் கூம்ஸ் .. .. .. | 476,553.01 | 4,196.46 | — | — | — | 480,749.47 | 310,401.80 | 17,197.51 | — | 327,599.31 | 153,150.16 |
| தொழிற்சாலை—சென்ற் ஜோக்கிம் .. .. .. | 10,101.84 | 930,227.60 | — | — | — | 940,329.44 | — | 404.07 | — | 404.07 | 939,925.37 |
| கட்டடங்கள்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | 787,207.80 | 1,053,377.22 | — | 8,050.36 | — | 1,832,534.66 | 5,029.68 | 31,166.29 | — | 36,195.97 | 1,796,338.69 |
| ஹந்தானை உபநிலையம் .. .. .. | 248,115.05 | 9,082.08 | 190.00 | — | — | 257,387.13 | 40,186.00 | 20,730.82 | — | 60,916.82 | 196,470.31 |
| பசறை உபநிலையம் .. .. .. | 79,822.87 | 18,911.00 | 32.50 | 7,792.12 | — | 90,974.25 | 17,137.93 | 7,206.33 | — | 24,344.26 | 66,629.99 |
| கொட்டாவ உபநிலையம் .. .. .. | 120,852.37 | 7,638.63 | — | — | — | 128,491.00 | 20,989.67 | 12,085.24 | — | 33,074.91 | 95,416.09 |
| தளபாடங்கள்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 598,420.08 | 111,053.51 | 2,625.14 | — | — | 712,098.73 | 239,927.07 | 60,104.51 | — | 300,031.58 | 412,067.15 |
| தளபாடங்கள்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | 31,706.75 | 6,791.84 | — | — | — | 38,498.59 | 1,169.18 | 3,170.68 | — | 4,339.86 | 34,158.73 |
| இணைப்புகள்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 285,508.81 | 22,739.82 | — | 33,012.92 | 45,175.31 | 230,060.40 | 208,998.88 | 25,249.59 | 45,175.31 | 189,073.16 | 40,987.24 |
| இணைப்புகள்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | 12,298.00 | 2,367.00 | — | — | — | 14,665.00 | 1,229.80 | 1,229.80 | — | 2,459.60 | 12,205.40 |
| காரியாலய இணைப்புகள்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 94,394.49 | 40,635.34 | — | — | — | 135,029.83 | 48,087.57 | 9,439.45 | — | 57,527.02 | 77,502.81 |
| காரியாலய இணைப்புகள்—சென்ற் ஜோக்கிம் .. .. | 6,905.32 | 8,610.00 | 3,730.86 | — | — | 19,246.18 | 617.93 | 1,063.62 | — | 1,681.55 | 17,564.63 |
| ஆராய்ச்சிக்கூட இணைப்பும் சில்லறை இயந்திரமும்—சென்ற் கூம்ஸ் .. | 860,214.13 | 180,844.59 | 16,057.10 | 4,642.61 | — | 1,052,473.21 | 409,713.50 | 87,162.86 | — | 496,876.36 | 555,596.85 |
| ஆராய்ச்சிக்கூட இணைப்பும் சில்லறை இயந்திரமும்—சென்ற் ஜோக்கிம் .. | 9,579.58 | — | — | — | — | 9,579.58 | 957.95 | 957.96 | — | 1,915.91 | 7,663.67 |
| தோட்ட இயந்திரம்—சென்ற் கூம்ஸ் .. .. .. | 276,328.52 | 190,496.75 | 33,012.92 | — | 18,600.54 | 481,237.65 | 268,860.30 | 28,423.96 | 18,600.54 | 278,683.72 | 202,553.93 |
| தோட்ட இயந்திரம்—சென்ற் ஜோக்கிம் .. .. .. | — | 634,813.94 | — | — | — | 634,813.94 | — | — | — | — | 634,813.94 |
| வாகனங்கள் .. .. .. | 349,096.04 | 104,651.70 | 3,500.00 | — | 15,851.35 | 441,396.39 | 235,734.76 | 41,403.50 | 15,851.35 | 261,286.91 | 180,109.48 |
| | ரூ 12,130,955.78 | 3,755,408.29 | 62,770.81 | 68,809.84 | 79,627.20 | 15,800,697.84 | 3,235,677.69 | 615,088.87 | 114,532.98 | 3,736,233.58 | 12,064,464.26 |